


# The Trumpet of the Seventh Angel
# ஏழாம் தூதனின் எக்காளம்



**1879 -1916** ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்
மலர் - 6. இதழ் - 1. ஜனவரி-பிப்ரவரி 2020


**R5818**

## The Labour of Love to be Rewarded
## அன்புள்ள பிரயாசத்துக்கு வெகுமதி அளிக்கப்பட வேண்டும்

*"உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே." (எபிரேயர் 6:10)*

அதைரியப்படுத்துவது கிருபையில் வளருவதற்கு ஒரு தடையாக இருக்கிறது. பரிசுத்த பவுல் தனது வாசகர்களை ஊக்கப்படுத்தும்படி நாடுகிறார். இந்த வசனம் அவர்கள் தடைகளையும் அதைரியப்படுத்துதலையும் அனுபவித்ததை குறிப்பாக உணர்த்துகிறது. அவர்கள் நன்றாக ஆரம்பித்தார்கள், ஆனால் பிறகு அவர்களது வைராக்கியம் தளர்வடைந்து விட்டது என்று கூறுகிறார். இந்த அதிகாரத்திலிருந்து பத்தாவது அதிகாரம் வரை, நாம் கிறிஸ்தவர்களான பிறகும் பின்வாங்கி விழுந்து போகக் கூடிய ஆபத்து இருக்கிறது என்று அவர் குறிப்பிடுகிறார். அதைரியப்பட்டுபோகிற நிலைமையிலிருக்கிறவர்களுக்கு உற்சாகம் அளிக்கிற வகையில் நமது வசனத்தில் அவர் கூறுகிறதாவது: "தமது நாமத்திற்காக நீங்கள் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தை மறந்து விடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவர் அல்லவே." மறந்து விடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவர் அல்லவே என்று கூறுகிற அளவுக்கு என்ன பெரிய வேலை அல்லது எப்படிப்பட்ட அன்பின் பிரயாசம் என்று நீங்கள் கேட்கலாம். அனைத்து மனுக்குலத்திற்குமான சரியான நல்ல வேலைகள் இல்லையா? இந்த நல்ல வேலைகளை மறப்பது எப்படி தேவனுக்கு அநீதியானதாக இருக்கும்?

தேவன் அங்கீகரிக்கிற அளவுக்கு எந்த நல்ல வேலைகளையும் உலகத்தினால் செய்ய முடியாது என்று வேத வாக்கியங்கள் கூறுகின்றன. "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை." ஆனால் "உங்கள் கிரியையையும் உங்கள் அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவர் அல்லவே" என்று அப்போஸ்தலர் எழுதுகிறார். அவர் எதை அர்த்தப்படுத்துகிறார்? தேவனுடன் உடன்படிக்கைக்குள் நுழைந்து தேவனுடைய பிள்ளைகளாகியிருக்கிற கிறிஸ்தவர்களிடத்தில் இதை கூறுகிறார். மற்றவர்களைப் போல அவர்களும் கோபாக்கினையின் பிள்ளைகளாக இருந்தார்கள். அவர்கள் அபூர்ணராக இருக்கிறார்கள். ஆனால் தேவன் இவர்களிடம் மாம்சத்தின்படி தொடர்பு கொள்வதில்லை. பலியின் உடன்படிக்கை என்ற ஒரு விசேஷித்த ஏற்பாட்டின் கீழ் அவர்களை தம்முடைய குடும்பத்திற்கு ஏற்றுக் கொண்டிருக்கிறார். கிறிஸ்து மூலமாக அவர்களது பலவீனத்திற்கு சலுகைகளை தருவார் என்றும், அவர்களது இருதயம் மனிதன் நோக்கத்தின்படி அவர்களுடன் தொடர்பு கொள்வார் என்றும் அந்த உடன்படிக்கையின்படி ஏற்றுக் கொண்டிருக்கிறார். அவருடைய பிள்ளைகளாக அவர்களும் அவரை சந்தோஷப்படுத்த நாடுவார்கள். இப்படியாக தேவன் தமது ஜனங்களுடன் ஒரு உடன்படிக்கைக்குள் நுழைந்து தமது சுய சித்தத்தை கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறார். ஒரு பக்கம் தேவனும், இன்னொரு பக்கம் அவர்களும் ஒருவருக்கொருவர் கட்டுண்டவர்களாய் இருக்கிறார்கள். அந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளிலிருந்து யாரும் தப்ப முடியாது.

### வெகுமதியை இழக்கும் அபாயம்

இந்த உடன்படிக்கைகுரியவர்கள் ஆதாமின் விழுந்து போன இனமாகவும் மரணதண்டனை கொடுக்கப்பட்டவர்களாகவும் இருந்தனர். ஆம்! ஆனால் இந்த இனத்திற்காகத் தான் கிறிஸ்து மரித்தார். ஆனால் இவர்கள் ஆதாமின் கீழ்ப்படியாமையினால் வந்த பாவம் மற்றும் மரணத்திலிருந்து விடுவிக்கப்படுவார்கள். கிறிஸ்துவின் மரணத்தின் இந்த புண்ணியம் முதன் முதலில் சுவிசேஷ யுகத்தில் தேவனையும் அவரது ஏற்பாடுகளையும் கிறிஸ்துவின் மூலம் சந்தோஷத்துடன் விரும்புகிற தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு வகுப்பாருக்கே உபயோகிக்கப்பட்டது. இவர்கள் கிறிஸ்துவை மீட்பராக கேள்விபட்டபோது, அவர்கள் அவரை விசுவாசித்து, கர்த்தருடன் ஒரு உடன்படிக்கைக்குள் நுழையும்படியாக தங்களது பூமிக்குரிய நம்பிக்கைகள், ஆசைகள், அபிலாஷைகள் அனைத்தையும் பலியிட்டார்கள். இப்படிப்பட்ட நடவடிக்கையை எடுக்க தூண்டியது, பூமியில் ஸ்தாபிக்கப்படவிருக்கிற ராஜ்யத்தில் கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரராயிருக்கும்படி ஆவிக்குரிய சுதந்தரத்தை அடைவோம் என்கிற நம்பிக்கையினால் தான். தேவன் தமது கிருபை மூலமாக கிறிஸ்துவுக்குள் ஒரு வழியை ஆரம்பித்திருந்தார். அவர்கள் பூமிக்குரியவைகளை உயர்ந்த பரத்துக்குரியவைகளுக்காக விட்டுவிட்டார்கள். அவர்கள் தானே முன்வந்து பூமிக்குரிய உரிமைகளையும், ஆசைகளையும் பலியிட்டார்கள். அவர்கள் மாற்ற இயலாதபடி கர்த்தருடன் தாங்களே கட்டிக் கொண்டார்கள்.

இந்த காரியத்தில் இப்பொழுது ஒரு தோல்வியை ஏற்படுத்தினால் எல்லாவற்றையும் முழுமையாக இழந்துவிடுவார்கள். இந்த உண்மையை அப்போஸ்தலர்

சுட்டிக் காட்டுகிறார். தேவனுடைய ஏற்பாடுகளை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவருடனான இந்த உடன்படிக்கையின் கீழ் அவர்களுக்கு ஒரு பெரிய வெகுமதி காத்திருக்கிறது. தேவனிடமிருந்து திரும்பி, தேவனால் முழுவதுமாக தள்ளப்படுகிற நிலைமையாகிய அனலும் அல்லாத குளிரும் அல்லாத நிலைக்குச் சென்று இந்த வெகுமதியை இழந்து விடாதபடி அப்போஸ்தலர் அறிவுறுத்துகிறார். அதை விட நல்ல தைரியத்துடன் இருந்து முன்னேற வேண்டும். கர்த்தராகிய யேகோவாவே உங்கள் இருதயங்களை பலப்படுத்துவாராக; அவருக்காக எதிர்பார்த்து காத்திருங்கள்.

10வது அதிகாரத்தில் அப்போஸ்தலர், அவர்களில் சிலர் கடந்த காலத்தில் துன்பத்தின் பெரிய போராட்டத்தில் எப்படி பொறுமையுடன் சகித்தார்கள் என்பதையும், தண்டிக்கப்பட்டவர்களிடத்தில் தயவுள்ளவர்களாகவும் தோழமையுடனும் இருந்ததற்காக அடைந்த துன்பங்களையும் பற்றி அவர்களுக்கு கூறுகிறார். இவை அனைத்தும் கர்த்தரினிமித்தமும் சகோதரர்களிடத்தில் உள்ள அன்பினிமித்தமும் தேவனுடைய திட்டங்களுக்கு இசைவாகவும் பொறுமையுடன் சகிக்கப்பட்டன. ஆகையால் தேவன் அவர்களிடம் அன்பு செலுத்தினார் என்பதையும் அவருக்காக அவர்கள் சகித்ததை அவர் பாராட்டினதையும் உணர்ந்து அவர்கள் தேவனிடம் நம்பிக்கை வைக்க வேண்டும். அப்போஸ்தலர் அவர்களை பின்வாங்கிப் போகாமலும் அவநம்பிக்கை அடையாமலும் இருக்க வேண்டும் என்றும், உற்சாகத்துடன் இருக்க வேண்டும் என்றும் புத்திமதி கூறுகிறார். அவர்கள் கடைசி வரை விடாமுயற்சியுடன் இருப்பார்கள் என்ற அவரது நம்பிக்கையை மறுபடியும் அவர் உறுதிப்படுத்துகிறார்.

### பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்வதின் மகிழ்ச்சி

பரிசுத்த பவுல், அவர்களது அன்பின் பிரயாசம் தேவனுடைய நாமத்தினிமித்தம் செய்யப்பட்டதை அறிவிக்கிறார். தேவனுடைய நாமத்தினிமித்தமான இந்த கனம் பரிசுத்தவான்களுக்கு செய்யும் ஊழியத்தில் அடங்கியிருக்கிறது. இது கர்த்தரிடத்தில் அவர்களது அன்பிற்கான ஒரு நிரூபணமாக இருக்கிறது. இந்த ஊழியமும் கூட நிறைவேற்றப்பட்டிருந்தது. பரிசுத்தவான்கள் உலகில் தேவனை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். ஆகையால் பரிசுத்தவான்களுக்கு எது செய்யப்பட்டாலும் அது தேவனுக்கு செய்யப்படுவதாகும். தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள் இருக்கிறவர்களுக்கும் உடன்படிக்கையின் உறவுக்குள் இல்லாதவர்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. உலகத்தைப் பொறுத்து நமக்கும் குறிப்பிட்ட கடமைகள் உண்டு. பொன்னான கட்டளை எப்பொழுதும் எல்லாரிடமும் செயல்படுத்தப்பட வேண்டும். ஆனால் பரிசுத்தவான்களிடம் நமக்கு உள்ள அதே கடமை உலகத்தாரிடம் கிடையாது. பரிசுத்தவான்களை கனப்படுத்தி ஊழியம் செய்கிறவர்கள் தேவனை கனப்படுத்தி ஊழியம் செய்பவர்களாவார்கள். இதுவே இந்த விஷயத்தில் அப்போஸ்தலரின் எண்ணமாக காணப்படுகிறது.

நாம் எல்லாருக்கும் நன்மை செய்ய வேண்டும், இல்லையென்றால் கர்த்தர் நம்மேல் கோபப்படுவார் என்று புரிந்து கொள்ளக் கூடாது. அப்போஸ்தலர், ''நமக்கு கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக யாவருக்கும் நன்மை செய்யக்கடவோம்'' என்று தூண்டுகிறார். எல்லாரிடமும் பெருந்தன்மையாக, அன்பாக இருங்கள், விசேஷமாக பரிசுத்தவான்களிடம் இருக்க வேண்டும். (கலாத்தியர் 6:10) இது தான் தேவனை குறிப்பாக சந்தோஷப்படுத்துகிற காரியம். அன்புடனும் சந்தோஷத்துடனும் பரிசுத்தவான்களுக்கு செய்கிற ஊழியம் தேவனுடைய மகிமைக்கு செய்கிற ஊழியமாகும். இது ஒரு விசேஷித்த விதத்தில் உண்மையானது. ஏனெனில் உலகில் சிறந்த குணமுடையவர்கள் இருக்கிறார்கள். சில விஷயங்களில் மூர்க்கமாகவும் பண்படாதிருக்கிற பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்வதைக் காட்டிலும் இவர்களுக்கு ஊழியம் செய்வது சந்தோஷமானதாக இருக்கும். ஆனால் பரிசுத்தவான்களுக்கு செய்யக்கூடிய ஊழியத்திற்கு தேவனிடமிருந்து விசேஷித்த ஆசீர்வாதம் உண்டு. தேவனுடைய பிள்ளைகளானவர்களை சந்திக்கும்போதும் அவர்களுடன் ஐக்கியம் கொள்ளும் போதும், அவர்களுக்கு உதவி செய்யவும் ஆறுதல் தரவும் சந்தர்ப்பம் கிடைக்கும் போதும் நாம் இதை ஞாபகத்தில் வைக்க வேண்டும். அவர்கள் நமது அன்பையும், நமது ஒத்துழைப்பையும் நமது தயவையும் நமது உதவியையும் பெற வேண்டும். மற்றவர்களுக்கு சந்தர்ப்பத்தை பொருத்து உதவி பண்ண வேண்டும். ஆனால் கிறிஸ்துவுக்குள்ளான நமது சகோதரருக்கு அப்படியல்ல.

இதே கொள்கை உலக ஜனங்களுக்கிடையே ஓரளவுக்கு ஏற்றதாக இருக்கிறது. உதாரணத்திற்கு விநோதமான மனிதர் விநோதமான மனிதருக்கு, பணக்காரனாக இருந்தாலும் ஏழையாக இருந்தாலும், படித்தவராக இருந்தாலும், படிக்காதவராக இருந்தாலும் சலுகை காண்பிப்பார்கள். ஆனால் மற்றவர்களிடம் காண்பிக்க மாட்டார்கள். இதே போல கொத்தனர்களும் ஒரு கொத்தனார் உலகெங்கிலும் உள்ள கொத்தனருக்கு அவர் ஏழையாக இருந்தாலும் பணக்காரனாக இருந்தாலும், வெள்ளையராக இருந்தாலும் கருப்பராக இருந்தாலும் சலுகை காண்பிப்பார். இவை மனித நிலை என்றால், கர்த்தருடைய பிள்ளைகளானவர்களிடையேயும் இது இருக்கும். அவர்கள் கிறிஸ்துவின் சீஷர்கள் என்கிற உண்மை, அதே ஆண்டவரை பின்பற்றுகிறவர்களுக்கு ஒரு சகோதரனுடைய அல்லது ஒரு சகோதரியினுடைய பங்கை செய்வதற்கு கடமையாக்குகிறது. இவர்களில் சிறியவர்களுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள். இது உலகிற்கு தற்போது பொருந்தாது. ஆனால் இது கர்த்தரின் உண்மையான சீஷர்களாகிய சபைக்கு தற்போது பொருந்தும்.

### இந்த ஊழியத்தில் விடா முயற்சி

அப்போஸ்தலர் கூறுகிறதாவது: ''நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்ததினாலும் செய்து வருகிறதினாலும்'' அவர்கள் அதே மனோபாவத்தில் இருக்கிறார்கள் என்பதை இது குறிக்கிறது. இந்த நல்ல வழியில் கொஞ்சம் உற்சாகம் குறைந்தாலும் அவர்கள் ஒருவருக்குகொருவர் உதவிகரமாக இருந்தார்கள். இது தேவனுடைய ஊழியம் என்பதினால் மட்டும் இது கணக்கிடப்படவில்லை. ஆனால் அநேக நல்ல காரியங்கள் அநேகரால் நடத்தப்படினும் அவைகள் தேவனால் நல்ல காரியங்களாக கணக்கிடப்படவோ அல்லது வெகுமானத்திற்குரியதாக அங்கீகரிக்கப்படவோயில்லை. உலகில் வேலைகள் எல்லாம் பாவிகளின் வேலைகள். உலகமானது

தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள் இல்லை. யாராவது ஒருவர் நல்ல வேலை செய்தால், அவர் எழுதப்படாத சட்டத்தின்படி அதற்குரிய ஆசீர்வாதத்தை பெறுவார். நல்ல எண்ணத்துடன் ஒருவர் ஒரு நல்ல காரியத்தைச் செய்தால் அவர் சில வெகுமதியை, ஆசீர்வாத்தைப் பெறுவார். இது அவரது குணத்தை மேன்மைபடுத்தி அடுத்த யுகத்தின் ஆசீர்வாதத்திற்கு தகுதிபடுத்தும். அடுத்த யுகத்தில் உலகத்திலுள்ள அனைவரும் தேவனுடைய நியாயத்தீர்ப்பின் சிங்காசனத்திற்கு முன்பாக ஜீவனுக்கான சோதனையில் இருப்பார்கள். அந்த நாளில் மேன்மையான குணமுடையவர்கள் சரிபண்ணப்பட சில அடிகளே தேவைப்படும். ஆனால் கர்த்தரின் தற்கால ஆசீர்வாதத்தைப் பெற, அவரது விசேஷித்த ஆசீர்வாதத்தைப் பெற ஒருவர் கர்த்தருடன் உடன்படிக்கையின் உறவுக்குள் இருக்க வேண்டும்.

இப்படிப்பட்ட உறவை தற்போது வைத்திருப்பவர்கள் செய்யும் வேலை தேவனால் கவனிக்கப்பட தகுதியுள்ளதாகவும் வெகுமதிக்கு ஏற்றதாகவும் இருக்கிறது. I கொரிந்தியர் 13ம் அதிகாரத்தில் கிறிஸ்துவின் சரீர அங்கங்கள் தேவனுடைய கிருபையை பெற அவர்கள் செய்யும் நல்ல வேலைகள் மட்டும் போதாது என்று அப்போஸ்தலர் கூறுகிறார். தனக்கு உண்டான யாவற்றையும் அவர் அன்னதானம் பண்ணினாலும், அவர் சரீரத்தை சுட்டெரிப்பதற்குக் கொடுத்தாலும், அது அன்பினிமித்தம் செய்யப்படாவிட்டால் பிரயோஜனம் ஒன்றுமில்லை என்று அப்போஸ்தலர் கூறுகிறார். மேலும் அவர் கூறுகிறதாவது: "நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும் அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும் ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்." மனிதனுடைய கனத்தைப் பெறுவதற்கு இந்த வேலைகளையெல்லாம் ஒருவர் செய்ய வேண்டும். இதை அவர்கள் வேறு எந்த காரணத்திற்காகவாவது செய்தால், தேவன் இதை வெகுமதிக்குரிய வேலையாகக் கருதமாட்டார். தேவன் பேரிலும் அவரது ஜனங்களின் பேரிலும் உள்ள அன்பினிமித்தமும், அவரிமித்தமும் நீதிமானாக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்ட அவரது விசுவாசமுள்ள ஜனங்களினால் செய்யப்படுகிற வேலைகளே நல்ல வேலைகளாக அங்கீகரிக்கப்பட்டு அவரது அங்கீகாரத்திற்கும் வெகுமதிக்கும் பாத்திரமானதாகக் கருதப்படும்.

மேலும் பரிசுத்த பவுல் இங்கே இவர்களிடம் கூறுவதாவது: "உங்கள் கிரியைகளையும் அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே." இதை மனதில் வைத்துக் கொள்வது மிக முக்கியம். நமது நோக்கம் கர்த்தரின் மேல் உள்ள அன்பினிமித்தமும் அவருக்காகவும் அவரது சகோதரர்களுக்காகவும் இருக்கும்படி நாம் பார்த்துக் கொள்வது மிகவும் முக்கியம். நமது தகுதிக்கும் சந்தர்ப்பத்திற்கும் தக்கவாறு நமது விடா முயற்சி இருந்தால் ஒரு ஆசீர்வாதமான வெகுமதியை இழக்கமாட்டோம்.

**R5819 (R 3700)**

## The Glorious Proclamation
## மகிமையான அறிவிப்பு (பிரகடனம்)

*லூக்கா 2:1–20*

*"இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்." லூக்கா 2:11*

பெத்லகேமின் வயல்வெளியிலிருந்த மேய்ப்பர்களுக்கு தேவதூதர்களின் செய்தி, அறிவிலும் கிருபையிலும் ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையின் வளர்ச்சிக்கு தக்கதாக அதிகமதிகமாக விலையுயர்ந்ததாக ஒலிக்கிறது. யுகங்களின் தேவனுடைய மகா திட்டத்தின் நீளம் மற்றும் அகலத்தின் அவரது புரிந்துகொள்ளும் கண்களும் காதுகளும் அதிகமாக திறந்திருப்பதால் அந்த தீர்க்கதரிசன செய்தி ஒரு முழு சுவிசேஷ செய்தியின் சுருக்கமாக மிகவும் உயர்வாக கருதப்படுகிறது. நமது இரட்சகரின் பிறப்பும் அந்த செய்தியின் ஆதாரமாக அமைந்திருக்கிற அந்த மகா நிகழ்வு நமது கவனத்திற்கு அடிக்கடி வருவதில்லை.

இரட்சகரின் பிறந்த நாள் டிசம்பர் 25 இல்லை என்பதினால் அல்ல. ஆனால் கன்னி மரியாள் கர்ப்பந்தரிக்கிற செய்தி காபிரியேல் தூதனால் அறிவிக்கப்பட்டதிலிருந்து ஒன்பது மாதத்திற்கு பிறகு நமது கர்த்தர் பிறந்தது ஏறக்குறைய அக்டோபர் 1 ஆம் தேதியாக இருக்கிறது. மனுக்குலத்திற்கு பெரிய காரியங்களை செய்த மகான்களுடைய பிறப்பு, இறப்பு, மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவை மனித குடும்பத்திற்கு மிகவும் முக்கியமானதானதால் இவைகள் எந்த நாளும், ஒவ்வொரு நாளும் நினைவுகூரப்பட்டு கொண்டாடப்படலாம். பெரும்பாலான கிறிஸ்தவர்கள் டிசம்பர் 25ஐ நமது கர்த்தரின் பிறந்த நாளாக கொண்டாடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் நாம் இதை எதிர்க்க தேவையில்லை. ஆனால் அவர்களுடன் சேர்ந்து மனக்களிப்புடன் கொண்டாடி, ஒருவருக்கொருவர் அன்பளிப்புகளையும் நினைவுப் பொருட்களையும் கொடுத்துக் கொண்டு, இப்படியாக, நமது இரட்சிப்புக்காக அன்பு மற்றும் தயவின் அன்பளிப்பாக தேவ குமாரனை மனுக்குலத்திற்கு கொடுத்த தெய்வீக கிருபையின் மாதிரியை பின்பற்றுவோம்.

நான்காயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தேவனால் வாக்களிக்கப்பட்ட அந்த குழந்தையானது துணிகளால் சுற்றப்பட்டு மனுக்குலத்தின் இரட்சிப்புக்காக கொடுக்கப்பட்டிருந்தது. ஏதேனில் தகப்பன் ஆதாமின் கீழ்ப்படியாமையினால் உலகத்தின் மேல்வந்த பாவம் மற்றும் மரணமாகிய மகா சாபமானது இறுதியாக நீக்கப்பட்டுப்போகும் என்றும் சாபத்திற்கு பதிலாக ஜீவனை அளிக்கும் ஓர் ஆசீர்வாதம் வரும் என்றும் அறிவிக்கப்பட்டது. பல்வேறு நிழல்கள், முன்னடையாளங்கள் மற்றும் உருவகங்களினால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இந்த பாடமானது விசேஷித்த விதமாக தெய்வீக சலுகைப் பெற்றிருந்த உடன்படிக்கைக்கு உள்ளான ஜனங்களாகிய யூதர்களிடையே நமது கர்த்தரின்

பிறப்பு வரை ஒரு யுக காலமாக வந்திருந்தது. யூதர்கள் வியாபார சிந்தையுடையவர்களாயிருந்ததால், அவர்கள் நாகரீகமடைந்த உலகின் எல்லாயிடங்களிலும் காணப்பட்டார்கள். ஆகையால் அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒரே தேவன், மேசியா மூலமாக இஸ்ரயேலருக்கு இரட்சிப்பு வரும் என்கிற நம்பிக்கை இருந்தது. ஆகையால் நமது கர்த்தர் பிறந்த அந்த சமயத்தில் சீக்கிரத்தில் வருகிற மேசியா என்று “எல்லா மனிதராலும் எதிர்பார்க்கப்பட்டது” என்று வாசிக்கிறோம். இந்த எதிர்பார்ப்பு நிச்சயமாக தானியேலின் தீர்க்கதரிசனத்தின் விளக்கத்தினால் கட்டப்பட்டது. இதன் மூலம் நமது கர்த்தர், இஸ்ரேல் மற்றும் உலகத்தின் உண்மையான மகா ராஜாவாக அபிஷேகம் பெற்றதும், உண்மையான மகா பிரதான ஆசாரியராக அபிஷேகம் பெற்றதும், பரிசுத்த ஆவியின் ஜெநிப்பித்தலை பெற்று தமது வேலைக்காக தமது அர்ப்பணிப்பை செய்ததும் அவர் முப்பது வயது ஆன போது என்பதை நாம் இப்பொழுது தெளிவாக பார்க்கிறோம்

## பெத்லகேம் முதல் நாசரேத் வரை

பழங்காலங்களில் மகிமையான நகரங்களும் இடை நிலையான நகரங்களும் இருந்தன. நாசரேத் இடை நிலையான நகரமாகவும் பெத்லகேம் மகிமையான நகரமாகவும், இஸ்ரயேலின் பிரியமான ராஜாவாகிய தாவீதின் நகரமாகவும் இருந்தன. நமது கர்த்தரின் தாய் மரியாளும் அவளது கணவன் யோசேப்பு இருவரும் தாவீதின் வம்சத்தில் வந்தவர்கள் என்றும், மேசியா பெத்லகேமில் பிறப்பார் என்று முன்னுரைக்கப்பட்ட தீர்க்கதரிசன நிறைவேறுதல் தற்செயலாக நடந்தது போல காணப்படுகிறதென்றும் வேத வாக்கியங்கள் விளக்குகின்றன. (மீகா 5:2)

அந்த சமயத்தில் அகில உலகத்தையும் ரோமர்கள் ஆண்டு வந்தனர். யூதர்களும் அவர்களுக்கு கீழ்ப்பட்டு இருந்தனர். வருகிற மேசியா தங்களை ரோமர்களிடமிருந்து விடுவித்து உலக ராஜ்யமாகிய அவரது ராஜ்யத்தில் அவர்களை ஆளுகிறவர்களாக ஆக்குவார் என்று அமைதியற்று எதிர்பார்த்திருந்தனர். இந்த நேரத்தில் ரோமாபுரியின் மகா ராஜாவாக அகஸ்து ராயன் ஆண்டு வந்தான். அவன் வரிவிதிப்பு முதலானவைகளுக்காக உலக முழுவதற்கும் ஜனத்தொகை கணக்கெடுக்கும்படி கட்டளையிட்டான். ராஜாவின் இந்த கட்டளைக்கிணங்க யோசேப்பும் மரியாளும் தங்களது பெயர்களை பதிவு செய்வதற்கு தங்களது சொந்த ஊருக்கும் சென்றார்கள் .அந்த சமயத்தில் இயேசு பிறந்தார் என்று லூக்கா நமக்கு கூறுகிறார். ஒரே சமயத்தில் ஜனங்களின் மகா கூட்டத்தினால் சத்திரத்தில் இடம் இல்லாததால் அதன் மாட்டுத் தொழுவத்தை தங்குவதற்கு சிலர் பயன்படுத்தினர். யோசேப்பும் மரியாளும் காலதாமதமாக வந்ததால் இந்த சாதாரண, எளிமையான இடத்தில் தங்க வேண்டியிருந்தது. இப்படியாக சீக்கிரத்தில் இந்த உலகை ஆளப்போகிற ராஜ்யத்தின் மகிமையின் ராஜாவின் மாம்சீக பிறப்பு மாட்டுத்தொழுவத்தில் நடந்தது. குழந்தை தீனித்தொட்டியில் போடப்பட்டது.

## தேவதூதர்களும் மேய்ப்பர்களும்

மேசியாவாகிய இயேசுவின் பிறப்பை சர்வவல்லவர் உயர்ந்த மேய்ப்பர்களுக்கு தூதர்கள் மூலமாக அறிவித்தார். இந்த செய்தி காலங்காலமாக ஒலித்து நமது காதுக்கு வந்து சேர்ந்திருக்கிறது. எந்த அளவுக்கு அதன் பொருளை நாம் உணர்ந்து கொள்ளுகிறோமோ அந்த அளவுக்கு நம்மை அது சிலிர்க்க வைக்கிறது. முதலாவது ஒரு தனிப்பட்ட தூதன் மேய்ப்பர்களுக்குத் தோன்றி, அவர்களது பயத்தை நீக்கி, “பயப்படாதிருங்கள்: இதோ, உங்களுக்கு நற்செய்தியை கொண்டு வந்திருக்கிறேன்” என்றான். விசேஷமாக கர்த்தரிடத்திலிருந்து வெளிப்படுத்தல் வரும்போது, மனித மனிதில் பயம் ஆதிக்கம் செலுத்துவது இயற்கையானதாக காணப்படுகிறது. சர்வ வல்லவரும் அவரது பிரமாணங்களும் பரிபூரணமானவர்கள் என்பதையும் மனிதர்கள் அவர்கள் இனத்தின் உயர்ந்த நிலையில் இருந்தாலும் அபூரணர்கள் என்பதையும் உணருகிறார்கள். சர்வ வல்லவரின் சாபமும் தண்டனையும் தங்கள் மேல் விழுந்திருக்கிறது என்றும் பாவகாரியங்கள் தொடர்ந்து அதிகரித்து வருவதால் இன்னும் சாபமும் தண்டனையும் அதிகரிக்கும் என்றும் இயற்கையாகவே உலகமானது பயப்படுகிறது. தெய்வீக பண்பும் திட்டமும் நன்கு அறிவிக்கப்பட்ட சிலரைத் தவிர மற்ற அனைவரிடமும் இது உண்மையாக இருக்கிறது. இப்படியாக மதம் என்பது பொதுவாக உலகில் வெறுப்பை உண்டாக்கக் கூடியதாக இருக்கிறது. மதத்தைப் பற்றிய காரியத்தை தவிர்க்க விரும்புகிறார்கள். அதிக அறிவு மற்றும் தண்டனையைப் பற்றிய திகிலும். குற்ற உணர்வுமே இதற்கு காரணம்.

அந்த காலத்தில் தேவதூதர்கள் கூறியது போல உலகத்தினர் பயப்படுவதைக் காட்டிலும் தேவன் உயர்ந்தவர் என்று உலகத்துக்கு உறுதியளிப்பது இன்றைய உண்மையான தேவனுடைய பிள்ளைகளின் வேலையாக இருக்கிறது. ஆதாமின் அபூரணம் மற்றும் தண்டனைக்குள்ளான அனைத்து சந்ததியினரின் மேல் வந்த சாபம் மற்றும் நீதியான மரண தண்டணையிலிருந்து இரட்சிக்கும்படி தேவன் இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்ததை நாம் அறிவிக்க வேண்டும்.

“சுவிசேஷம்” என்ற வார்த்தையின் இன்னொரு மொழிபெயர்ப்பு “நற்செய்தியாகும்.” சுவிஷேம் என்பது எப்படி உண்மையிலேயே நற்செய்தியாக இருக்கிறது! ஐயகோ! தங்களை தேவனுடைய ஊழியக்காரர் என்று கூறுபவர்கள் உத்தரிக்கும் ஸ்தலம் மற்றும் நித்திய ஆக்கினை போன்றவை உண்டு என்று கூறி தேவனுடைய குணத்தையும் அவரது வசனத்தையும் தவறாக அறிவிக்கிற அவர்களது இருண்டகால பல்வேறு போதனைகளுக்கு சுவிசேஷம் (நற்செய்தி) என்ற வார்த்தையை பயன்படுத்துகிறார்கள். நாம் இந்த தப்பறையான கருத்துகளிலிருந்து விலகி, சுவிசேஷம் என்பது நற்செய்தி என்ற சத்தியத்தை பெறுவோமாக. இந்த செய்தி எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி என்று தேவதூதன் விவரித்தான். நாம் இதற்கு முன் கொண்டிருந்த எந்த எண்ணங்களைக் காட்டிலும் தேவனுடைய திட்டம் பரந்து, விரிந்து ஆழமான, மகா பெரியதாக இருக்கிறது. ஆ, தேவனுக்கு ஸ்தோத்திரம். தற்போது கேட்கிறதற்கான காதுகளையும், காண்கிறதற்கான கண்களையும் பெற்றிருக்கிற சிலருக்கு மட்டுமே இந்த சுவிசேஷ செய்தி நற்செய்தியாக இராமல், தேவனுடைய ஏற்ற காலத்தில் எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியாக இருக்கும்.

ஆதாமின் சந்ததியாக இருப்பதினால் ஒவ்வொருவரும் அவரது வீழ்கையிலும் மரண சாபத்திலும் பங்கு பெற்றது போல கர்த்தராகிய இயேசு கொடுத்ததும் கல்வாரியில் நிறைவேற்றினதுமான மகா இரட்சிப்பின் பலியில் ஆதாமின் ஒவ்வொரு அங்கமும் உட்படுத்தப்பட்டார்கள். கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய திட்டம் சரியாக கிரியை நடப்பித்துக் கொண்டிருக்கிறது என்பதும் அது நிறைவேற்றி முடிக்கப்படும் என்பதும் எல்லாருக்குமான மகா சந்தோஷத்தை அர்த்தப்படுத்துகிறது. இந்த சந்தோஷ செய்தி நமது ஆண்டவர் பிறந்த கணமே கொடுக்கப்பட்டது. ஏனெனில் அவர் ஒருவரால் மட்டுமே தெய்வீக நோக்கம் மற்றும் திட்டத்தின் அனைத்து மகிமையான காரியங்களும் முடிவாக நிறைவேற்றப்படும்.

## செய்தியின் காரணமும் நியாயமும்

மாறாத தேவன் ஏன் ஒரு சாபத்தை அறிவித்துவிட்டு, அதை நடைமுறைபடுத்த வேண்டியிருக்கும்போது, காரியங்களை மாற்றி சாபத்திற்கு பதிலாக ஆசீர்வாதத்தை தருகிறார் என்று விவேகமான ஜனங்கள் அறிந்து கொள்வதற்கான கவனத்தை செய்தியானது ஈர்க்கிறது. தூதுவர்கள் தெய்வீக திட்டத்தின் தத்துவத்தை கூறுகிறார்கள். "இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்றும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்." தேவன் தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் எப்படி இருக்க முடியும் என்பதற்கான முழு சுவிசேஷ அறிக்கைக்கான விளக்கத்தை நாம் அங்கே பெற்றிருக்கிறோம். "இரட்சகர்" என்ற வார்த்தை இங்கே ஜீவனை அளிப்பவர் என்பதை குறிக்கிறது. மரணமானது பாவத்தின் சம்பளமாக மனித இனத்தின்மேல் சாபமாக இருக்கும்போது, பிறந்திருந்த மேசியா, மனுக்குலத்திற்கு திரும்ப ஜீவனைக் கொடுத்து தப்புவிக்கிறவராக இருப்பார் என்கிற உண்மை எவ்வளவு அழகாக இருக்கிறது. அவர் எப்படி ஜீவனைக் கொடுப்பார் என்கிற விளக்கம் அங்கே கொடுக்கப்படவில்லலை; அந்த சமயத்தில் அது அவசியமும் இல்லை. ஆனால் இப்பொழுது அபிவிருத்தியின் வெளிச்சத்தில் புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியின் மூலமாக கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்துடன், ஆதாம் மற்றும் அவனது தண்டனையை இப்படியாக உடனே பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எதிரான தெய்வீக நீதியை எப்படி அநீதியுள்ளவர்களுக்கு பதிலாக நீதியுள்ளவராக மரித்து தம்முடைய ஜீவனை தாமாக முன் வந்து பலி கொடுத்து முடித்தார் என்பதை நாம் இப்பொழுது காண்கிறோம்.

இயேசுவின் பிறப்பில் உருவெடுக்க ஆரம்பித்த நமக்கான இரட்சிப்பின் தெய்வீக திட்டத்தை உண்மையிலேயே நாம் அதிகமாக பார்க்கிற அளவுக்கு மானிட பிள்ளைகளின் மேல் தேவனுடைய தயவுக்காக நன்றியுடன் பரலோக தேவனை துதிக்கும் தேவதூதர்களின் பாட்டோடு நாமும் உற்சாகத்துடன் ஆர்ப்பரிப்பதை உணருகிறோம். பெத்லகேமில் பிறந்திருக்கிற குழந்தை எதிர்கால மீட்பராக இருப்பதும், வளர்ந்து முப்பது வயதில் மனித பருவத்தை அடையும் வரை தமது வேலையை செய்ய இன்னும் அபிஷேகம் பண்ணப்படாமல் இருப்பதும் பாதகமில்லை; தமது மூன்றரை வருட பூமிக்குரிய ஊழியத்தில் தமது ஜீவனை படிப்படியாக கொடுத்து கல்வாரியில் நிறைவேற்றவேற்றுவது அவசியமாயிருந்தது என்பதும் பாதகமில்லை; அவரது உயிர்த்தெழுதல் இன்னும் மூன்று நாளுக்கு பிறகு என்பதும், பரலோகத்திற்கு எழுந்தருளுவது நாற்பது நாட்களுக்கு பிறகு என்பதும், பொதுவான ஆசீர்வாதம் இன்னும் ஏறக்குறைய பத்தொன்பது நூற்றாண்டுகள் தள்ளிப்போவதும் பாதகமல்ல. இரட்சிப்பின் தெய்வீக திட்டம் முதல் அரும்பில் இருக்கும் போதே தேவதூதர்கள் பாடி ஆர்ப்பரிப்பதினால் முடிவான பலனில் விசுவாசமாயிருக்கும் அனைவரும் சொல்லமுடியாத சந்தோஷத்துடனும் களிப்புடனும் பரலோக தேவனுக்கும் நமது கர்த்தராகிய அவருடைய குமாரனுக்கும் துதி செலுத்தலாம்.

தேவதூதர்கள் செய்தியைக் கொடுத்திலிருந்து பத்தொன்பது (தற்போது இருபது) நூற்றாண்டுகள் உருண்டோடியிருந்தாலும், "சிறுமந்தையில்" இருந்து விசுவாச கண்களையும், விசுவாச காதுகளையும் பெற்றிருக்கிற அனைவரது விசுவாசத்தின்படி ஒரு குறிப்பிட்ட அளவே நிறைவேறியிருக்கிறது. ஆனால் தெய்வீக திட்டத்திற்கு நிந்தையாகவும், தெய்வீக குணலட்சணத்திற்கு அவமரியாதையாகவும் மகா துக்க செய்தி கிறிஸ்துவின் நாமத்தில் கிட்டதட்ட அனைத்து ஜனங்களுக்கும் பரவியிருக்கிறது. அந்த செய்தி சந்தோஷத்தை எடுத்துச் செல்வதற்கு பதிலாக வருத்தத்திற்குரிய, துக்ககரமான செய்தி விசேஷமாக அன்பான இருதயம் உள்ளவர்களிடத்திற்கும் அதிக பெருந்தன்மையுள்ளவர்களிடத்திற்கும் சென்றிருக்கிறது. கர்த்தராகிய இயேசுவைப் பற்றிய நல்ல அல்லது கெட்ட செய்தி எல்லா ஜனங்களுக்கும் போய்ச் சேரவேயில்லை என்று நாம் கூறலாம். பத்தொன்பது நூற்றாண்டு கால பிரச்சாரத்திற்கு பிறகு இப்போது, சொற்பமான மனித குடும்பங்களே, நாம் இரட்சிக்கப்படும்படிக்கு "வேறொரு நாமம் கட்டளையிடப்படாமல்" வானத்தின் கீழெங்கும் கட்டளையிடப்பட்ட அவரது நாமத்தை கேள்விப்பட்டிருக்கிறார்கள். (அப்போஸ்தலர் 4:12)

கிறிஸ்துவை தங்களது இரட்சகராக உண்மையாகவே ஏற்றுக்கொண்டிருப்பவரிகளிடத்திற்கும் இன்றைய நாளில் அவரிடத்தில் களிகூருகிறவர்களிடத்திற்கும் தேவனுடைய இரட்சிப்பு தங்களது இருதயத்தில் ஆரம்பித்திருப்பதை விசுவாசத்தினால் காண்கிறவர்களிடத்திற்கும் வந்திருக்கிற இன்னும் வானத்தின் கீழேங்கும் முழுமையாக பூர்த்தியடைய வேண்டியிருக்கிற இரட்சிப்பைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? இதை அப்போஸ்தலர் நம்பிக்கையினால் உண்டாகும் இரட்சிப்பு என்கிறார். அவரது வார்த்தையாவது: "நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்." (ரோமர் 8:24) உண்மையிலேயே நாம் இரட்சிக்கப்படவில்லை. இன்னும் நாம் பாவம், வலி, வெட்கம், அழுகை மற்றும் மரணம் ஆகியவற்றால் சூழப்பட்டிருக்கிறோம். சாபமானது இன்னும் நீக்கப்படவில்லை. தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் விசுவாசத்தினாலும், நம்பிக்கையினாலும் இரட்சிப்பை பெற்றிருக்கிறார்கள். எனினும் எதிர்கால இரட்சிப்பு, மரித்தோரின் உயிர்த்தெழுதல், உண்மையுள்ளவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கனம், மகிமை மற்றும் சாகாமையில் பங்குபெறுதல் ஆகியவைகளை எதிர் நோக்குதல் மிகவும் உறுதியுடனும் தெளிவாகவும் இருக்கிறது. இதைப் பெற்றிருப்பவர்கள், சோதனைகள், துன்பங்கள், பலவீனங்கள்

மற்றும் மனுக்குலத்தின் மேல் இருக்கிற சாபத்தினால் உண்டாகும் சாதகமற்ற நிலைமைகளிலும் சொல்ல முடியாத சந்தோஷத்தினாலும் முழுமையான மகிமையுடனும் களி கூருகிறார்கள்.

## நற்செய்தியின் தீர்க்கதரிசனம்

ஆம், தேவதூதர்களின் செய்தியானது, ஆயிர வருட யுகத்தில் சபைக்கும் உலகத்திற்கும் நிறைவேற்றப்படவேண்டிய நற்செய்தியின் ஒரு தீர்க்கதரிசனமாக இருந்தது. முதலாவது சபையானது ஆசீர்வாதத்தை பெற வேண்டியிருக்கிறது. ஆசீர்வதிக்கப்பட்டவர்களும் பரிசுத்தவான்களுமே முதலாம் உயிர்த்தெழுதலில் இருப்பார்கள். அவர்கள் உயிர்த்து, ஆயிர வருட யுகத்தில் கிறிஸ்துவுடன் அரசாளுவார்கள். அதில் சாத்தான் கட்டப்பட்டிருப்பான். அப்பொழுது சத்தியம் மற்றும் நீதி ஆகிய நல்ல சக்திகள் பூமியில் விழிப்புணர்வை உண்டாக்கும். சபையின் மீட்பு ஆயிர வருட யுக நாளின் அதிகாலையில் வரும். இது குறித்து தீர்க்கதரிசி கூறுகிறதாவது: "அதிகாலையிலே தேவன் அதற்கு சகாயம் பண்ணுவார்." (சங்கீதம் 46:5)

இப்பொழுது காண்கிற, இப்பொழுது நம்புகிற இப்பொழுது சொல்ல முடியாத சந்தோஷத்தினால் களிகூறுகிற நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கிற சுவிசேஷத்தின் மகிமையான நம்பிக்கையில் நாம் களிகூருகிறபடியால், தெய்வீக தயவும் அன்பும் இப்படிப்பட்ட நீளமுடையதாக, அகலமுடையதாக, உயரமுடையதாக, ஆழமுடையதாக இருப்பதில் நாம் சந்தோஷப்படுகிறோம். நம்மை நேசித்து, நம்மை தமது விலையேறப் பெற்ற இரத்தத்தினால் விலைகொடுத்து வாங்கினவர் மூலமாக ஆதாமின் சந்ததி ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ஆசீர்வாதத்தை அளிக்கும்படி மனுக்குல உலகம் முழுவதிலும் இவை சூழ்ந்திருக்கிறது.

தேவதூதனின் இந்த தீர்க்கதரிசனமானது, ஆயிர வருட யுகத்தில் நிறைவேறும், முன்னரே நம்மை தமது பலியினால் மீட்டிருக்கிற மகா இரட்சகர், இராஜாவாக, மகிமையடைந்த மேசியாவாக நின்று, மானிட இனத்தின் ஒவ்வொரு அங்கத்தினரையும் ஆசீர்வதிக்கவும் உயர்த்தவும் அவரது நீதியான அரசாட்சியை ஸ்தாபிப்பார். "உலகத் தோற்ற முதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகளெல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள்" என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகளுக்கு இசைவாக சொல்லப்பட்ட இளைப்பாறுதலின் காலங்களாக அவைகள் இருக்கும். (அப்போஸ்தலர் 3:19–21) கர்த்தர் உலகின் நம்பிக்கையை அதன் நீதியான வேலைகளின் அடிப்படையில் வைத்திருந்தால் நாம் உண்மையில் பயப்பட்டிருக்க வேண்டும். உண்மையிலேயே உலகத்தைப்பற்றி எந்த அளவுக்கு அதிகமாக நாம் தெரிந்திருக்கிறோமோ அந்த அளவுக்கு குறைவான நம்பிக்கையை பெற்றிருப்போம். ஆனால மாறாக, கர்த்தர் எதிர்கால ஆசீர்வாதங்களை உலகத்தின் நீதியான வேலைகளில் வைக்காமல், தனது குமாரனின் பலியின் தகுதியின் அடிப்படையில் வைத்திருக்கிறார் – கர்த்தராகிய மேசியா என்னும் இரட்சகர் உங்களுக்காக பிறந்திருக்கிறார்.

வரும் யுகத்தின் ஆசீர்வாதங்கள் எப்படி நமது சந்தோஷத்தைக் கூட்டுகின்றன. இப்பொழுது சபையாக, "தெரிந்து கொள்ளப்பட்டவர்களாக" மனிதர்களிடமிருந்து கூட்டிச் சேர்க்கப்பட்டு வருகிற "சிறுமந்தையின்" மேல் உள்ள அக்கறையினால் இந்த சுவிசேஷ யுகத்தின் சோதனைகளும் கஷ்டங்களும் தெய்வீக மேற்பார்வையின் கீழாக இருக்கின்றன. நமது மணவாளனும், நமது நம்பிக்கையும் நமது கர்த்தருமாகிய தேவனுடைய பிரியமான குமாரனின் குணலட்சண சாயலிலும், பரிசுத்த ஆவியின் கிருபையிலும் கனிகளிலும் அபிவிருத்தி அடைவதற்கு உருவேற்படுத்தலும் மெருகேற்றுவதுமாகிய தற்கால சோதனைகளும் துன்பங்களும் எப்படி அவசியமாக இருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகவும் மணவாட்டியாகவும் இருக்கப்போகிற உலகத்திலிருந்து அழைக்கப்பட்டு, தெரிந்து கொள்ளப்படடவர்களின் எண்ணிக்கை சீக்கிரத்தில் நிறைவடைந்து அவர்களது மகிமைக்குள் நுழைவார்கள் என்கிற எண்ணம் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது. அவர்கள், ஆசீர்வாதம் மற்றும் உயர்த்துதல் போன்ற தெய்வீக கிருபையை உலகுக்கு விரிவுபடுத்துகிறதில் தங்களது கர்த்தரும் ஆண்டவருமானவருடன் சலுகையை பெறுவார்கள் என்கிற எண்ணம் எவ்வளவு விலையேறப்பெற்றதாயிருக்கிறது. இப்படிப்பட்ட உயர்ந்த கனம் அல்லது சலுகை அல்லது ஆசீர்வாதம் யாருக்காவது வரக்கூடுமா?

"உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக" என்று மேய்ப்பர்களுக்கு பரமசேனையின் திரள் தோன்றி துதித்தபோது இருந்த தேவ தூதனால் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை அறிவித்த பிறகு இது சாத்தியமாயிற்று. இது கூட ஒரு தீர்க்கதரிசனம். இது இன்னும் நிறைவேறவில்லை. ஆனால் தேவனுடைய ஏற்ற காலத்தில் இதன் ஒவ்வொரு காரியமும் நிறைவேறும். இது மிகவும் சமீபத்தில் இருக்கிறது. வாசலருகே இருக்கிறது என்று நாம் விசுவாசிக்கிறோம். உன்னதத்திலே தேவன் மகிமையையும், பூமியிலே மனுஷரிடத்தில் சமாதானத்தையும் இன்னும் உண்டாக்கவில்லை. இதற்கு மாறாகவே இருக்கிறது. தேவனுடைய நாமம் தூஷிக்கப்படுகிறது; இழிவான முறையில் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவர்களாலும் பிசாசுகளை தங்கள் தெய்வங்களாக நினைத்து அவர்களை வணங்குகிற புறஜாதிகளாலும் மாத்திரமல்ல. கிறிஸ்தவ ஜனங்களாலும் தேவனுடைய நாமம் அனுதினமும் தூஷிக்கப்படுகிறது. தேவதூஷணம் என்பது அவமரியாதையாக மற்றவர்களை தவறாக பிரதிநிதித்துவப்படுத்துவது என்று அறியப்படுகிறது. தேவன் நம்மிடம் கருணையுள்ளவராயிருக்கிறார். ஏதாவது ஒரு சமயத்தில் அல்லது மற்ற சமயத்தில் நம்மில் ஒவ்வொருவரும் பரிசுத்த நாமத்தை தூஷித்திருக்கிறோம். அதாவது தெய்வீக திட்டத்தையும் தெய்வீக குணலட்சணத்தையும் தவறாக போதித்து, தேவனுடைய அன்பையும், தயவையும், நியாயத்தையும் மற்றும் சத்தியத்தையும் தவறாக சித்தரித்து, பாவத்தில் பிறந்து, துர்க்குணத்தில் உருவாகி, அக்கினி பொறிகள் மேலே பறக்கிறது போல பாவத்தில் பிறந்த அவரது மகா திரளான ஜனங்களுக்காக நித்திய வேதனையை திட்டமிட்டவரும் உருவாக்கினவரும் மற்றும்

நிலைநிறுத்தினவரும் என்று கூறி அவரை தூஷித்திருக்கிறோம்.

ஆனால் கர்த்தர் நம்மேல் தயவாயிருந்தார். ஏனெனில் அதை அறியாமல் செய்தோம். அதேபோல் நாம், அறியாமல் தேவனை தவறாக போதிக்கிறவர்களிடத்தில் நாம் மனதுருக்கமாக இருக்க வேண்டும். தேவனுடைய அன்பின் நீளத்தையும் அகலத்தையும் உயரத்தையும் ஆழத்தையும் புரிந்து கொள்ளும்படியான அவர்களது கண்கள் மிகவும் அகலமாக திறப்பதற்கு ஏதுவாக நமது சக்தியை தொடர்ந்து பயன்படுத்த வேண்டும்.

இப்படியாக பூமியில் சமாதானமும் மனுஷர்மேல் பிரியமும் இரட்சகரின் பிறப்பை தொடர்ந்து உடனே வராமல் தூரமாய் இருக்கிறது என்பதை கவனித்து, இது ஒரு தீர்க்கதரிசனம் என்றும் அது ஆயிர வருட யுகத்தில் நிறைவேறும் என்றும் பகுத்துணர வேண்டும். அநேகர் இந்த வசனத்தை "பூமியில் மனுஷர்களுக்கிடையே சமாதானம், அவர்களில் அவர் மிகவும் சந்தோஷப்படுவார்" என்றும் மாற்றி மொழி பெயர்க்க விரும்பியிருக்கிறார்கள். இப்படியாக அவர்கள் மாற்றி மொழி பெயர்த்தாலும், அது உண்மையாயிராது, ஏனெனில் கர்த்தருடைய பிள்ளைகளுக்குக் கூட பூமியிலே சமாதானமில்லை. எப்படிப்பட்ட சமாதானத்தை அவர்கள் தங்கள் இருதயங்களில் பெற்றிருந்தாலும், அது அவர்கள் கர்த்தரின் மேலும் அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருந்த மகிமையானவைகளின் மேலும் வைத்த விசுவாசத்தினாலேயாகும். தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் என்றும், ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே என்றும் நமக்கு உறுதியளித்து நமது கர்த்தரும் அப்போஸ்தலர்களும் இதற்கு சாட்சியமளித்தார்கள். (2 தீமோத்தேயு 3:12; மத்தேயு 10:36) வசனத்தின் சாட்சியத்தில் நாம் குழப்பமடையாமலும் அதை சுருக்காமலும் இருப்போமாக. ஆனால் விசுவாசக் கண்களோடு கிறிஸ்துவின் நாளுக்காக நாம் எதிர்நோக்கியிருப்போமாக. அதில் இந்த மகிமையான காரியங்கள் அனைத்தும் நிறைவேறும்; அதில் அப்போஸ்தலர் குறிப்பிட்டது போல, வேதனைப்படும் சர்வ சிருஷ்டிகளிடமிருந்து சாபத்தை நீக்கி, தேவ கிருபையை கொண்டு வந்து, கர்த்தரின் மகிமையான அறிவுடன் சமாதானம் முழு உலகத்தையும் உண்மையிலேயே நிரப்பும். (ரோமர் 8:22)

ஆயிர வருட யுகத்தின் ஆரம்பத்தில் கூட இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறாது, மனுக்குலம் ராஜ்ய ஒழுங்குகளினால் பாவம், வியாதி, வலி, துக்கம் மற்றும் மரணம் ஆகியவைகளிலிருந்து விடுவிக்கப்பட்டு, ஆதாம் இழந்த எல்லாவற்றிலுமிருந்து உயர்த்தப்பட்டு அந்த யுகம் முடியும் வரை இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறாது; உண்மையிலேயே உன்னதமான தேவனுக்கு மகிமை உண்டாகும் வரைக்கும், மனிதரிடையே சமாதானம் உண்டாகும் வரைக்கும் இது நிறைவேறாது. தேவனுடைய நீதியை கிறிஸ்துவில் கண்ட பிறகும் கூட முழு மனுக்குலமும் தெய்வீக அன்பையும், கிருபையையும் அறிந்து கொள்ளும் என்று நாம் புரிந்து கொள்ளக்கூடாது. மாறாக,தேவ கிருபைக்கும், நித்திய ஜீவனுக்கும் தகுதியின்மையை நிரூபிக்கும் ஒரு வகுப்பார் இருப்பார்கள் என்று வேத வாக்கியங்கள் போதிக்கின்றன. இப்படிப்பட்டவர்கள் இரண்டாம் மரணத்தில் ஜனத்திலிருந்து முற்றிலுமாக அழிக்கப்படுவார்கள் என்று சந்தோஷத்துடன் நாம் அறிகிறோம். இப்படியாக முடிவாக, ஆயிர வருட யுக முடிவில், சாத்தானும், தெரிந்தே பாவம் செய்பவர்களும், அழிக்கப்படும் பொழுது வானத்திலும் பூமியிலும், பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவருக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக என்று வேதவாக்கியம் அறிவிக்கிறபடி சொல்லக்கேட்கும் பொழுது அந்த நேரம் வரும். ஓசன்னா! உன்னதமானவருக்கு மகிமையுண்டாவதாக! மனிதருக்கு சமாதானமும் பிரியமும் உண்டாவதாக என்பது வேத வாக்கியங்களில் சொல்லப்பட்ட பிரகாரமாக, இரட்சிப்பின் மகா திட்டமானது முழுவதுமாக நிறைவேறும் போது இரட்சிக்கப்பட்டவர்களின் கடைசி ஆர்ப்பரிப்பாக இருக்கும்.

நமது கர்த்தரின் பிறப்பின் நேரம் முற்றிலும் தெளிவாக நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இந்த பாடத்தை விபரமாக தொகுதி–2, பாடம் 2 இல் பார்த்திருக்கிறோம். ஆகையால் இங்கே அதை திரும்ப சொல்ல வேண்டியதில்லை. அகஸ்து ராயனின் கட்டளைப்படி அந்த காலத்தில் நாகரீக மடைந்த உலகில் ஜனத்தொகை கணக்கெடுப்பு செய்யப்பட்டது. யூத வழக்கப்படி ஒவ்வொரு குடும்பமும் தங்கள் கோத்திரப்படி பதிவு செய்யப்பட்டது. யோசேப்பும் மரியாளும் தாவீதின் வம்சத்தினராயிருந்தபடியால், தாவீதின் பட்டணமாகிய பெத்லகேமுக்குச் சென்றார்கள். அந்த பட்டணம் மலைப்பகுதியில் சிறியதாக இருந்தது. அதிலுள்ள அனைத்தும் கீழே கொடுக்கப்பட்டுள்ளபடி சாதகமான சூழ்நிலையாக தோன்றியது.

அந்த நாட்டின் விடுதிகள் அல்லது தங்குமிடங்கள் இப்பொழுது இருப்பதைக் காட்டிலும் மிகவும் வேறானதாக இருந்தது. அவைகள் ஓட்டலும் அல்ல, மதுபான சாலையும் அல்ல. ஆனால் முற்றத்திலிருந்து ஆரம்பிக்கும் வழிபோக்கர் தங்கும் இடம். பிரயாணிகளின் சேவைக்காக அறைகலன் (Furniture) இல்லாத பலவிதமான பெரிய அறைகள் இருக்கும். அந்த பிரயாணிகள் தங்களுடன் படுக்கை விரிப்புகளையும், உணவுகளையும் பாத்திரங்களையும் எடுத்துக் செல்வார்கள். தரைதளத்தில் குதிரைகள், ஒட்டகங்கள் முதலானாவை தங்கும் தொழுவம் அல்லது லாயம் இருக்கும். கூட்டம் அதிகமாக இருக்கும்போது, அதுவும் ஜனத்தொகை கணக்கெடுப்பு நடக்கும்போது கூட்டம் அதிகமாக இருந்ததினால் மேல் அறைகளில் இடமில்லாதிருந்தது ஆச்சரியமல்ல, ஆகையால் தங்கள் சௌகரியத்திற்கு தொழுவத்தில் தங்கினார்கள். இப்படியாக வார்த்தையானவர் (லோகாஸ்), கர்த்தர் உலகத்தில் வந்தபொழுது மிகவும் எளிமையானவராக்கப்பட்டார். (யோவான் 1:2)

மேய்ப்பர்கள் குழந்தையை பார்த்த பொழுது தேவதூதர்கள் சொன்னபடி அங்கே இருப்பதை கண்டார்கள். அவர்கள் இந்த உண்மையை, வெளியே சென்று அறிவித்தார்கள்; ஆனால் மரியாள் இது குறித்து மனதில் எதுவும் கொள்ளாமல் தேவனுடைய ஏற்ற காலத்திற்கு காத்திருந்தாள்.

**R5156**

## Our Lord’s knowledge of His Pre-existence
## நமது கர்த்தரின் முந்தய ஜீவியத்தைப் பற்றிய அறிவு

*“என் தாசனாகிய நீதிபரர் தம்மைப்பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்து கொள்வார்.” (ஏசாயா 53:11)*

இந்த கூற்றானது நமது ஆண்டவர் தமது ஊழியத்திற்கு முக்கியமான தொடர்புடைய அறிவைப் பெற்றிருந்தார் என்று குறிப்பாக உணர்த்துகிறது. அவர் தமது அர்ப்பணிப்பை செய்திருந்தாலும், இந்த அறிவு இல்லாமல், சாத்தானின் தாக்குதலிலும், சத்துருவானவன் அவரை அவரது அர்ப்பணிப்பிலிருந்து ஒதுக்கி வைக்க முயற்சித்து வேத வாக்கியங்களை தவறாக விளக்குவதிலும் அவர் நிலைத்து நின்றிருக்க இயலாது. நமது கர்த்தர் முப்பது வயதில் பூரண மனிதனான போது, அவரது அற்புதமான பிறப்பையும், யேகோவா தமது பிதா என்பதையும், பழைய ஏற்பாட்டின் வேத வாக்கியங்களை எந்த வகையிலாவது நிறைவேற்ற வேண்டியவராயிருந்தார் என்பதையும் அறிந்திருந்தார். அவரது அர்ப்பணிப்பு வரை அவரை வழிநடத்த இந்த செய்திகள் அவருக்கு போதுமானதாக இருந்தது. பின்னர் அவருக்கு கிடைத்த அதிகமான அறிவு, அவரது விசுவாசத்தை நிரூபிப்பதற்கான சோதனைக்காக வந்தது. அவர் ஆரம்பத்திலிருந்தே அவருடைய நோக்கத்திலும் எண்ணத்திலும் உண்மையுள்ளவராக இருந்தார். அவர் பெற்றிருந்த அறிவு இல்லாமல், பாதையின் நெருக்குதல்களை சந்திக்க அவர் திறமையுள்ளவராக இருந்திருக்கமாட்டார் என்பதை நாம் அனுமானிக்கலாம்.

இந்த அனுபவம் நம்முடையதைப் போன்றதே. நாம் அர்ப்பணம் செய்த போது, அதற்கு போதுமான அறிவைப் பெற்றிருக்கிறோம். நாம் மேலும் முன்னேறும்போது, நாம் சத்திய அறிவுக்குள் வழி நடத்தப்படுகிறோம். இது நமது அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்த உதவுவதற்கு தேவனுடைய கிருபையாக இருக்கிறது. நமது கர்த்தர் கூறியதாவது: “பரிசுத்த ஆவி சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்தி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.” (யோவான் 16:13) இதேபோல இயேசுவை பரிசுத்த ஆவி வழி நடத்தி, வருங்காரியங்களையும் கடந்த காரியங்களையும் அறிவித்தது. தேவனுடைய திட்டத்தை இப்பொழுது நமக்கு தெளிவாக காண்பித்ததுபோல் அவருக்கும் தெளிவாக்கியது. அவர் அதை மிகவும் தெளிவாக அறிந்திருப்பார். ஏனெனில் அவர் பரிபூரணர், நமது சிந்தை அபூரணமானது.

### அவரது ஜீவிய நிலைமை ஒரு தாழ்ந்த நிலைக்கு மாற்றப்பட்டது

நமது கர்த்தராகிய இயேசு, மனிதனாகிய கிறிஸ்து இயேசு எப்படி, எப்பொழுது தமது மனித நிலைமைக்கு முன்னான நிலைமையை அறிய வந்தார் என்பதை நம்மால் அறிய இயலவில்லை, காரணம் அதற்கான வெளிப்படுத்தல் எதுவுமில்லை. ஆகையால் யூகத்திற்கு விடப்படுகிறோம். பல்வேறு சிந்தைகள், கொடுக்கப்பட்ட விவரங்கள் மற்றும் உண்மைகளிலிருந்து பல்வேறு அனுமானங்களை பெருகின்றன. நமது கர்த்தர் நிக்கோதேமுவிடம், “பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரம காரியங்களை உங்களுக்கு சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்?” (யோவான் 3:12) என்று சொன்னதிலிருந்து அவர் தமது ஊழிய காலத்தில் பரம காரியங்களைக் குறித்து நல்ல தெளிவான அறிவைப் பெற்றிருந்தார் என்று நாம் யூகிக்கலாம். மறுபடியும் தமது சீஷர்களிடம் கூறினதாவது: “மனுஷகுமாரன் தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப் போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும்?” (யோவான் 6:62) அவர் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே பரம பிதாவிடம் கூறியதாவது: “பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்தில் மகிமைப்படுத்தும்.” (யோவான் 17:5) இப்படியாக தாம் மனிதனாக இருந்ததற்கு முன்னிருந்த நிலைமையை தாம் அறிந்திருந்ததை காண்பித்தார். எப்படி, எப்பொழுது இந்த அறிவை அவர் பெற்றார் என்று நாம் கேட்கிறோம். இந்த காரியம் குறித்து நாம் விவாதிக்கும் போது ஆதியிலிருந்து பிதாவோடிருந்த வார்த்தையானவர் (லோகாஸ்) இயேசுவின் சரீரத்தில் நுழைந்து இப்படியாக இயேசுவின் சரீரத்தை ஒரு போர்வையாக அல்லது திரையாக பயன்படுத்தினார் என்று வேத வாக்கியங்களில நாம் காண்கிறதில்லை. மாறாக, வார்த்தையானவர் (லோகாஸ்) மாம்சமாக்கப்பட்டார், அவர் மாம்சத்திற்குள் நுழையவில்லை என்று பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் அவதாரம் எடுத்தல் என்ற கொள்கையை நாம் மறுக்கிறோம்; அது குழப்பமான மதசாஸ்திரத்திலிருந்து வந்தது. வார்த்தை (லோகாஸ்) மாம்சமானது என்றும், அவர், மனிதனாகி கிறிஸ்து இயேசுவானார் என்றும், அவர் தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷசாயலானார் என்றும் வேதாகமம் நமக்கு கூறுகிறது. (பிலிப்பியர் 2:5-8) அவர் முன்னர் பெற்றிருந்த மகிமையையும் கனத்தையும் ஒதுக்கி வைத்தார் என்றும், அவர் தரித்திரர் ஆனார்- அவர் மாம்சத்திலிருந்தபோது ஏழையாக இருந்ததினாலல்ல. அவர் ஐசுவரியமுள்ளராக இருந்தும் நம் நிமித்தம் தரித்திரரானார் (2 கொரிந்தியர் 8:9) என்றும் வேதாகமம் கூறுகிறது. இந்த முறைக்கான அவசியம் என்ன என்பதை வேதாகமம்

கூறுகிறது. "மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று." (1 கொரிந்தியர் 15:21) அவர் முதல் மனிதனின் ஜீவன் மற்றும் ஜீவிய உரிமைகளுக்கு ஒரு சரியான விலைக்கிரயமாக வந்தார்.

முன்னர் லோகாஸாக உயிர்கொடுத்த உயிர்ப்பொறி, (Sparked Life) ஆவிக்குரிய நிலையிலிருந்து மாம்சீக நிலைக்கு உயர்ந்த நிலை அல்லது சுபாவத்திலிருந்து தாழ்ந்த நிலை அல்லது சுபாவத்திற்கு மாற்றப்பட்டது. இந்த மகிமையான ஜீவி பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு இறுதியாக மனித ஜீவியாக பிறந்தது. அதே உயிர்ப்பொறி தொடர்ந்து பராமரிக்கப்பட்டது என்று நாம் நம்புகிறோம். அவரது உயிர்ப்பொறி மரண தண்டனை விதிக்கப்பட்ட ஆதாமின் சந்ததியிலிருந்து வரவில்லை என்ற உண்மை, அதே உயிர்ப்பொறி கன்னி மரியாளின் கர்ப்பத்திற்கு மாற்றப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகிறது. மற்ற மனித குழந்தைகளைப் போலவே இந்த குழந்தை பிறந்தது, ஆனால் பூரணராக இருந்தார். ஏனெனில் அது பரிபூரண ஜீவனிலிருந்து அபிவிருத்தி செய்யப்பட்டது. அவர் ஒரு அசாதாராண பையனாக, மற்ற பிள்ளைகளைப் பார்க்கிலும் ஞானமுள்ளவராக இருந்திருப்பார். அவர் மனித சரீரத்தில் மாத்திரமல்ல, ஞானத்திலும் தேவ கிருபையிலும் மனுஷர் தயவிலும் விருத்தியடைந்தார் என்று மேலும் வாசிக்கிறோம். (லூக்கா 2:52) அவர் மற்றவர்களைக் காட்டிலும் வேறுபட்டவர் என்று மனுக்குலம் உணர்ந்தது. முழு விஷயமும் தேவனுக்கு சந்தோஷமாக இருந்தது. இயேசு மனித பருவத்தை நெருங்கியதால் அதிகமாக தேவனுக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது.

### அவரது பொறுப்புணர்ச்சியின் அபிவிருத்தி

இயேசு பன்னிரண்டு வயதை அடைந்த போது, அதிக அறிவுடையவராகக் காணப்பட்டார். தாம் அதிசயத்தக்கவிதமாக பிறந்ததையும் மற்றவர்களைக் காட்டிலும் வித்தியாசமானவர் என்பதையும் தமது தாயின் மூலம் அறிந்திருக்கலாம். "அவர் உன்னதமானவரின் குமாரன் என்னப்படுவார்" என்பதையும் மேசியாவைப் பற்றி முன்னுரைக்கப்பட்டவைகளை அவர் நிறைவேற்றுவார் என்பதையும் தமது தாயின் விளக்கத்தையும் பெற்றிருந்தார். (லூக்கா 1:32,33,55) இந்த காலத்தில் தமது ஊழியத்தை ஆரம்பிக்க இது சரியான காலமா, இல்லையா என்பதை, தமது வயதிற்கு அதிகமான மனவளர்ச்சியினால் அல்ல, சத்தியத்திலும் உண்மைத்தன்மையிலும் கேட்க ஆரம்பித்தார். ஒரு ஆசாரியராக தமது பொறுப்புகளை நினைத்து எந்த நேரத்தில் ஒரு மனிதன் ஆசாரியராக வேண்டும் என்பதை கவனிக்க ஆரம்பித்தார். பன்னிரண்டு வயது குழந்தை இப்படிப்பட்ட கேள்விகள் கேட்கிறதைப் பார்த்து நியாய சாஸ்திரிகள் ஆச்சரியப்பட்டார்கள். அந்த உரையாடல் மூலம் தமது ஊழியத்தை ஆரம்பிக்க சரியான நேரம் அது அல்ல என்பதை அவர் அறிந்திருப்பார் என்று நாம் அனுமானிக்கிறோம். இந்த அறிவை அவர் ஒப்பிட்டு பார்க்கும் முறைமூலம் தெரிந்திருக்கமாட்டார். ஆனால் அதை அவர் வேதத்திலிருந்தும் வேதத்தை நன்கு அறிந்தவர்களிடமிருந்தும் பெற்றிருப்பார். இந்த தீர்மானம் அவர் முப்பது வயதை அடையும் வரை எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தியிருக்காது.

பிறகு அவர் தன்னுடைய தாய் மரியாள் மற்றும் அவளது கணவர் யோசேப்புடனும் திரும்பி வந்து அவர்களுக்கு கீழ்ப்பட்டு இருந்தார் என்று நாம் வாசிக்கிறோம். அப்பொழுது அவரது ஊழிய வேலைகளில் அவர் நுழையவில்லை. தம்மை அவர் சிறுவனாக கருதி தம்மை பொறுப்பெடுத்துக் கொண்டவர்களுக்கு கீழ்ப்பட்டு இருந்தார். அவர் யோர்தானில் யோவானிடம் வரும் வரை இதுவே அவரது நிலைமையாக இருந்தது. இதற்கு முன்னதாக அவர் எந்தவித போதிக்கும் வல்லமையையும் அவர் வெளிப்படுத்தவில்லை. அவர் கற்பவராக இருந்தார். போதகராக அல்ல. ஒவ்வொரு ஓய்வு நாளிலும் அவர் தேவாலயத்தில் இருந்தார். அங்கே வாசிக்கப்படுகிற தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, தம்மைப் பற்றி சொல்லப்பட்டுள்ள தீர்க்கதரிசனங்களையும், மேசியாவைப்பற்றிய தேவனுடைய தேவைகளையும் அறியவும் அவைகளை தியானிக்கவும் செய்தார். யூத தேசம் இருந்தது போலவே இவரும் ஒரு குழப்ப நிலையிலிருந்தார். ஆனால் அவர் மற்றவர்களைக் காட்டிலும் ஒரு வித்தியாசமான சிந்தையைப் பெற்றிருந்தார். இவர் கேள்வி கேட்கும் அறிவைக்குறித்து அவர்கள் ஆச்சரியமடைந்தார்கள்.

### முப்பது வயதில் அவரது அறிவு

நமது கர்த்தர் அவரது முப்பது வயதில், ஆதாம் தனது சோதனையில் இருந்த போது பெற்றிருந்த அறிவைக்காட்டிலும் அதிகமாக பெற்றிருக்க வேண்டும். பாவம் என்றால் என்ன என்பதையும் அதன் தண்டனை என்ன என்பதையும் இயேசு அறிந்திருந்தார். மனுக்குலத்தின் மீட்புக்காக தேவன் செய்திருந்த ஏற்பாடுகளையும், இது புது உடன்படிக்கையின் மகாமத்தியஸ்தரும், இரட்சகரும், மீட்பரும் பாதுகாவலருமானவரால் நிறைவேற்றப்படும் என்பதையும் அறிந்திருந்தார்; தேவனுடைய பிரமாணங்கள் தேவனால் மோசேயிடம் கொடுக்கப்பட்ட பத்து கட்டளைகளில் எழுதப்பட்டிருக்கிறது என்பதையும், அதை மற்றவர்கள் கடைபிடிக்க முடியாதவர்களாயிருக்கிறார்கள் என்பதையும் தம்மால் கடைபிடிக்க முடியும் என்பதையும் அவர் அறிந்திருந்தார். அவரது அதிசயத்தக்க பிறப்பை பற்றியும், காபிரியேல் தூதனால் சொல்லப்பட்ட செய்தியையும், அன்னா மற்றும் சிமியோன் மூலம் வந்த தீர்க்கதரிசனங்களையும் அவரது தாய் அவருக்கு சொல்லியிருந்தார். இந்த அளவான செய்திகள் அவருக்கு மிகவும் மதிப்புடையதாக இருந்திருக்கும். மகா மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனத்தையும் அவர் வந்து உலகத்தை மீட்க வேண்டும் என்பதைப் பற்றியும் அவர் அறிந்திருந்தார்.

ஆனால் அவர் வேதவாக்கியங்களில் உள்ள ஆழ்ந்த கருத்துகளில் மட்டும் குறைவுபட்டிருந்தார். வேதாகமத்தில் சில குழப்பங்களை அவர் கண்டார். அவர் பரிசுத்த ஆவியை பெறாதிருந்தபோது, விழுந்துபோன இனத்தைக் காட்டிலும் அவர் அதிக தகுதியுள்ளவராக இருந்தார். ஆனால் அப்போஸ்தலர் கூறுகிறதாவது: "ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான். . . . அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாக ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்." (1 கொரிந்தியர் 2:14) இயேசு பரிசுத்த ஆவியை பெறாதிருந்ததால் தீர்க்கதரிசனங்களையும் பிரமாணங்களின் வகையையும் அறியாதிருந்தார்.

நமது கர்த்தர் ஞானஸ்நானம் பெற்று தமது சீஷர்களை தம்முடன் சேர்த்துக் கொள்ளும்வரை, போதிக்க துவங்கவில்லை. பரலோக ராஜ்யம் சமீபமாயிருந்தது என்பதையும், இஸ்ரயேல் தேவனுடன் நெருங்க முயற்சி செய்ய வேண்டும் என்பதையும் ராஜ்யம் வெளிப்படுத்தப்படும்போது அதற்கு ஆயத்தமாயிருக்க வேண்டும் என்பதையும் புரிந்து கொள்ளாமலேயே அவர்கள் (சீஷர்கள்) அறிவிக்க வேண்டியவர்களாயிருந்தார்கள். அவர்கள் பிசாசுகளை துரத்துவதற்கு நமது கர்த்தர் தமது வல்லமையை அவர்கள் மேல் வைத்தார். ஏனெனில் பெந்தெகொஸ்தே நாள் வரை அவர்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையை பெறவில்லை.

அதேபோல, தற்போது, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவதற்கான நிபந்தனைகளின் கீழ் முழுமையாக அர்ப்பணிப்பதற்கு முன் கிறிஸ்துவின் சபையில் மூப்பராக, போதகராக ஆவதற்கு யாரும் தகுதியை பெறுவதில்லை என்பதை நாம் காண்கிறோம். நமது கர்த்தரின் அர்ப்பணிப்பை ஜனங்கள் தெளிவாக அறிந்திருந்தார்கள். நமது கர்த்தர் யோர்தானில் பரிசுத்த ஆவியின் ஜெநிப்பித்தலை பெற்ற போது, அவரும் யோவான் ஸ்நானனும் பரிசுத்த ஆவி இறங்கி வருவதை பார்த்தார்கள்; யேகோவாவின் சாட்சியத்தைக் கேட்டார்கள். அதன் பிறகு யோவான் ஸ்நானன், "கண்டு, சாட்சியாக சொன்னேன்" என்றார். திரளான ஜனங்கள் அதை பார்த்து, கேட்டிருந்தால், இயேசு தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்பதற்கு இவர் சாட்சி கூற வேண்டிய அவசியமிருந்திருக்காது. (யோவான் 1:32–34)

## ஆவியின் ஜெநிப்பித்தலுக்கு பிறகு அவரது மனதின் பிரகாசம்

இயேசு தமது ஞானஸ்நானத்திற்கு பிறகு, தமது சொந்த நிலைமையிலும், பிதாவுடனான அவரது உறவிலும், ஆவிக்குரிய காரியங்களிலும் பெரும் மாற்றம் அடைந்தார். அந்த சமயத்தில் பரிசுத்த ஆவி இயேசுவின் மேல் இறங்கி வருகிறதை யோவான் ஸ்நானன் பார்த்தபோது, நாம் வாசிக்கிறதாவது: "வானம் அவருக்கு திறக்கப்பட்டது." (மத்தேயு 3:16) "வானம்" என்று சொல்லும்போது வானத்திற்கு மேலேயுள்ளவைகளின் தூரதிருஷ்ட கண்ணாடியின் காட்சி இயேசுவுக்கு திறக்கப்பட்டது என்று பொருளல்ல, மேலானவைகள் அவருக்கு திறக்கப்பட்டன என்று பொருள்; சுபாவ மனுஷன் பெற முடியாததைப் பெற்றார். ஒரு மனிதன் எந்த அளவுக்கு பூரணனாக இருந்தாலும், ஆவிக்குரிய காரியங்களை அவன் பெற முடியாது. பரிசுத்த பவுல் கூறுகிறதாவது: "ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான். அவைகள் அவனுக்குப் பைத்தியமாக (அர்த்தமற்றதாக) தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாக ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்." (1 கொரிந்தியர் 2:14)

நமது கர்த்தர் பரிசுத்த ஆவியை பெற்றபொழுது, அவரது மூளையில் ஒரு பதிவு செய்யப்பட்டிருக்கும் என்று நாம் யூகிக்கிறோம். அது அவர் மனித சுபாவத்திற்கு முன்னிருந்த நிலைமையைப் பற்றிய ஞாபகங்களை கொடுத்திருக்கும். இல்லையென்றால் சுபாவ மனித மூளை அதை பெறமுடியாது. சுபாவ மனுஷனில் ஒவ்வொரு நினைவும் மூளையில் பதிவு செய்யப்படுகிறது. மனித சுபாவத்திற்கு வருவதற்கு முன் பெற்றிருந்த நினைவுகளும் அறிவும் எப்படி நமது கர்த்தரின் மூளையில் பதிவு செய்யப்பட்டிருக்கும் என்பதை நாம் காணக்கூடும். நமது கர்த்தரின் ஆவியின் ஜெநிப்பித்தலின் அந்த கணத்திலிருந்து, பரம காரியங்களைக் குறித்த விசேஷித்த அறிவை அவர் பெற்றார் என்று நாம் விசுவாசிக்கிறோம்.

முப்பது வருட காலமாக தம்மை எதற்காக தயார்படுத்தியிருந்தாரோ அந்த ஊழியத்தை ஆரம்பிக்காமல் அவர் வனாந்தரத்திற்கு சென்று நாற்பது நாட்களாக வேத வாக்கியங்களை ஆராய்ந்தார். அவர் முன்னரே இந்த வேதவாக்கியங்களை சிந்திக்க எத்தனையோ நாற்பது நாட்களை பெற்றிருந்தார். தமது அர்ப்பணத்திற்கு முன்னர் அதே புரிந்துகொள்ளும் சக்தியை பெற்றிருந்திருப்பாரானால், அந்த நாற்பது நாட்கள் ஆராய்வதற்கு தேவைப்பட்டிருக்காது. அதை அவர் ஊழியத்திற்கு பயன்படுத்தியிருப்பார். அவர் மனித சுபாவத்திலிருந்த அவரது அனைத்து வருடங்களும் இப்படிப்பட்ட அறியும் சக்தியை அவருக்கு கொடுத்திருக்காது. இந்த அறியும் சக்தியை அவர் ஞானஸ்நானத்திற்கு பிறகு அவர் பெற்ற இந்த மனதின் ஒளியூட்டுதல் மூலம் பெற்றார் என்பது தெளிவாகிறது. அவரது ஊழியத்தின் முழு நோக்கத்தையும் மதிப்பையும், மேசியாவைப்பற்றி வேத வாக்கியங்களில் எழுதப்பட்ட ஒவ்வொன்றையும் அவர் பெற ஆரம்பித்தார்.

அவர் பிரமாணங்களையும், தீர்க்கதரிசிகளையும் ஆராய்ந்ததால் இந்த ஒளியூட்டுதலின் வெளிச்சத்தில் பலியின் உடன்படிக்கையின் நிபந்தனைகளை அவர் பார்த்தார். பல்வேறு முன்னடையாளங்களில் இதுவரை மறைந்துள்ள அர்த்தங்களை பார்த்தார். மேசியா ஆளுகை செய்தால், அது நீதி மற்றும் தேவன் பேரில் உள்ள விசுவாசத்தின் ஒரு வெளிப்படுத்தலின் மூலமாக இருக்கும் என்பதை அவர் பார்க்க ஆரம்பித்தார். அவர்

ஒளியூட்டப்பட்டவுடன், துன்பப்படுவதற்குரிய காரியங்களையும் பார்த்து அதன் மூலம் பிறகு அவர் கீழ்ப்படிதலின் அர்த்தத்தை முழு அளவில் கற்றுக்கொண்டார். இப்படியாக அவருக்கு மிகவும் சக்தி வாய்ந்ததாயிருந்த ஒளியூட்டுதலை அவர் பெற்றார். அதேபோல நமக்கும் அது ஒரு பெரிய ஒளியூட்டுதலாக, நமது அழைப்பின் நிபந்தனைகளைக் காணும்படியாக இருக்கிறது. மேலும் அவருடன் ஆளுகை செய்ய வேண்டும் என்றால் அவரது அடிச் சுவட்டில் நடக்க வேண்டும் என்பதையும் காணும்படி செய்கிறது. தேவனால் போதிக்கப்படுகிறவர்களுக்கு வேத வாக்கியங்கள் அறிவு புகட்டும் சக்தியாக செயல்படுகிறது. பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் மட்டுமே தேவனுடைய வசனத்தின் உண்மையான ஆழத்தை புரிந்துகொள்ள முடியும்.

நமது கர்த்தர் அர்ப்பணத்திற்குள் நுழைந்த பொழுது, பாவ நிவாரண நாளின் பலிகள், புத்தகத்தில் எழுதப்பட்டிருந்த அனைத்து காரியங்கள் மற்றும் செய்யும்படி அவர் உடன்படிக்கை பண்ணியிருந்த காரியங்களின் அர்த்தங்களை மனக்குழப்பத்துடனே பார்த்தார். “புத்தகங்களில் எழுதப்பட்டுள்ளவைகளை” செய்யும்படி அவர் முன்னரே உறுதியெடுத்திருந்தார். ஆனால், இப்பொழுது அவர், இதன் உண்மையான அர்த்தம் மரணம், சிலுவை மரணம் இவற்றின் உண்மையான அர்த்தம் என்ன என்பதை கண்டுகொண்டிருந்தார்!

## ஆவிக்குரிய பிறப்பிற்கு பிறகு அவரது அதிகமான ஒளியூட்டுதல்

நமது கர்த்தர் மரித்தோரிலிருந்து ஆவியின் ஜீவியாக உயிர்த்தெழுப்பப்பட்ட போது அதிசயத்தக்க காரியம் நடந்திருக்க வேண்டும் என்று நாம் காண்கிறோம். ஏனெனில் மறுபடியும் அவர் சுபாவ மாற்றத்தைப் பெற்றார். மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்ட அந்த ஒருவர் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட புது சிருஷ்டியாக இருந்தார். அவர் முன் அனுபவங்கள் ஆவிக்குரிய நிலை மற்றும் மானிட நிலை இரண்டின் அனுபவங்கள் அனைத்தையும் பெற்றிருந்தார்.

அப்படியானால், பிதாவானவர் நமது கர்த்தரை எப்படி மரித்தோரிலிருந்து ஒரு ஆவியின் ஜீவியாக எழுப்பினார்? மேலும் எப்படி இந்த ஆவியின் ஜீவி, மாம்சத்தில் அவர் பெற்ற அனுபவங்களையும், மாம்சமாக்கப்பட்டதற்கு முன் இருந்த அனுபவங்களையும் பற்றிய அறிவைப் பெற முடிந்தது? இது தெய்வீக வல்லமையால் கொடுக்கப்பட்டது என்பதைத் தவிர, இதை புரிந்து கொள்ளுவது இயலாது என்று நாங்கள் பதில் கூறுகிறோம். எப்படிப்பட்ட கிரியை நடந்திருந்தாலும், ஆவியின் நிலையை அவர் அடைந்த பிறகு, முன்பு மாம்சத்திலும் ஆவியிலும் இருந்த அனுபவங்கள் அனைத்தும் கூட்டிச் சேர்க்கப்பட்டு அவரது சிந்தையில் தெய்வீக சக்தியால் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இல்லையென்றால் நமது கர்த்தரின் மானிட அனுபவங்களும் அதற்கு முன்னிருந்த அனுபவங்களும் மதிப்பில்லாததாக இருக்கும்.

இதைப் போலவே சபைக்கும் இருக்கும் என்று நாம் பார்க்கிறோம். நாமும் கரு நிலையில் ஆவியின் ஜீவியாக இருக்கிறோம். நாம் அவருக்கு ஒப்பாக உயிர்த்தெழுதலில் எழுப்பப்படும் போது நமக்கு மாம்சீக மூளை இருக்காது. ஆகையால், தற்கால அனைத்து அனுபவங்களையும் ஞாபகத்தில் பெறுவதற்கு தெய்வீக சக்தியை நாம் சார்ந்து இருப்போம். “மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும். கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்ம சரீரமுமுண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு.” (1 கொரிந்தியர் 15:42–44) ஆகையால் இதை படிக்கும்போது, தெய்வீக சக்தி, தற்கால ஆசீர்வாதமான அனுபவங்கள் அனைத்தையும் இந்த ஆவியின் சரீரத்தில் பதிய வைக்கும் என்று நாம் நினைக்கிறோம். இதனால் இந்த அனுபவங்கள் கனியற்றதாக இல்லாமலும், நமக்கு நன்மை பயக்கக்கூடியதாகவும் இருக்கும். இன்னும் புது உடன்படிக்கையின் வேலைகளை செய்யவும். தெய்வீக வேலையை இன்றும் திறமையாக செய்யவும் அதிக தகுதியுள்ளவர்களாக்கும் என்று நினைக்கிறோம்.

## நமது கர்த்தர் “யேகோவாவின் மகிமையின் பிரகாசமாக”இருக்கிறார்

நமது கர்த்தர் மனிதனாக வருவதற்கு முன்னதாக பூரணராக, உண்மையுள்ளவராக, விசுவாசமுள்ளவராக காணப்படாவிட்டால், மனிதனை மீட்பதற்கு மனிதனாகும் ஒரு சிறப்புரிமையை அவர் பெற்றிருக்க முடியாது. அவர் தமது குணலட்சணத்தில் சரிபடுத்துவதற்கான எந்தவித குறைவையும் காண்பிக்கவில்லை. ஆகையால் அவர் குணலட்சணத்தில் பூரணத்தை அடைவதற்கு எந்தவித அனுபவத்தின் உதவியும் தேவையில்லை. மனிதனாக அவரது அனுபவங்கள் மிகவும் பாதகமான சூழ்நிலைகளில் அவரது உண்மைத்தன்மையையும் கீழ்ப்படிதலையும் சோதிப்பதற்காக கொடுக்கப்பட்டன.

நமது கர்த்தர் தாம் முன்னிருந்த எல்லா நிலைகளிலும் உண்மையுள்ளவராக இருந்தார். அவர் ஒரு மனிதனாக உண்மையுள்ளவராக இருந்தார். அவர் தெய்வீக சுபாவத்திற்கான மகிமையை பெற்ற பிறகும் உண்மையுள்ளவராக இருக்கிறார். ஆகையால் அவரது மூன்று நிலைகளின் அனுபவங்களும் அவரது குணலட்சணம் மிகவும் உயர்த்த நிலையில் இருந்தது என்பதை விளக்குவதாக இருந்தது என்றும் அவர் “யேகோவாவின் தற்சொரூபமாக” இருந்தார் என்றும் கூறி முடிக்கிறோம்.

## R 5158 How Righteous Character is produced

# நீதியான குணலட்சணம் எப்படி உருவாக்கப்படுகிறது

நமது சித்தம் நமது தேர்வைக் குறிக்கிறது. ஆனால் நமது தெரிவு என்பது நம்மை சுற்றியுள்ளவைகளின் மேல் நமது உணர்வையும் தீர்மானத்தையுமே அதிகமாக சார்ந்துள்ளது. ஒரு குழந்தை ஒரு கூரான கத்தியையோ அல்லது ஒரு நெருப்பையோ தொட்டு வெட்டுக் காயத்தையோ அல்லது தீக்காயத்தையோ பெறுவதைப் போல, நமது சித்தம் சில சமயங்களில் நமக்கு நன்மை பயக்காத காரியங்களை கிரகிக்கிறது. நமது கர்த்தரின் சத்தத்தை நாம் முதலாவது கேட்டதிலிருந்து நமது சித்தத்தைப் பற்றிய கற்றறிதல் முன்னேற்றத்தைப் பெறுகிறது. ஏனெனில் அவர்களது சிந்திக்கிற முறைகளும் அவர்களது கருத்துக்களும் மற்றும் அவர்களது தெரிவுகளும் குறையுள்ளதாக இருக்கின்றன.

தேவனுடைய குணலட்சணங்கள் மற்றும் தெய்வீக திட்டம் போன்றவைகளில் நமது அறிவுடன் நமது மனதின் வலிமையும் பெருகுகிறது. அவரது பூரணத்தை வார்த்தையானவராக (Logos) மற்றும் மனிதன் கிறிஸ்து இயேசுவாக நாம் நினைக்கும் போது, நமது சொந்த அபூரணத்தை ஓரளவுக்கு உணர முடிகிறது. மேலும் அது முதல் நமது அபூரண தீர்மானத்தை சார்ந்தவைகளை நீக்கும்படி நாடுவோம். அவர் "பரிசுத்தரும் குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும்" என்பதையும் அவர் பரிபூரணர் என்பதையும் ஞாபகப்படுத்திக் கொள்கிறோம். மேலும் அவர் அர்ப்பணம் செய்த மனத்துடன், நெருக்கமான பாதையில் அவரது வாழ்க்கையின் அனுபவத்தினால் முக்கியத்துவம் அடைந்த அவரது சரியான சித்தத்துடனும் சமநிலையான மனதுடன் நுழைந்தார். நமக்கு முன்னால் அவரது பூரணமான உதாரணத்துடன், நமது சித்தத்தை தெய்வீக சித்தத்துக்கு இசைவாக பயிற்றுவிக்கும்படி அனுதினமும் நாம் நாடுகிறோம்.

சித்தம் என்பது மனதின் குணங்கள் அல்லது சாமார்த்தியத்தின் ஒரு குறிப்பிட்ட இணைப்பின் பலன்கள் ஆகும். ஆகையால் நாம் நமது மனதின் குணங்களின் வேறுவித இணைப்புகளின் மூலம் நமது சித்தத்தை மாற்றலாம். உதாரணமாக, மனதின் ஒரு குணம் செல்வம் சேர்க்கும் பேராவல் ஆகும். மனதின் மற்றொரு குணம், நீதி, மற்றொன்று சங்கீதம், மற்றொன்று கலை இன்னும் பல.

ஒருவரிடம் நீதி என்னும் குணம் குறைவாக இருந்து செல்வம் சேர்க்கும் குணம் அதிகமாக இருந்தால் அது அவரை திருடுவதற்கு வழி நடத்தும். இது தவறான செயல் என்று கூறுவதற்கு அவரிடம் நீதி என்கிற குணம் இல்லாதிருக்கும். சிலர் பணத்தை எடுத்துக் கொள்ள தூண்டப்படலாம் அல்லது அன்பை திருப்திப்படுத்த நேர்மையற்ற எதையாகிலும் செய்யலாம். அதேபோல் சங்கீதம் போன்றவைகளுக்காகவும் அநீதி செய்யலாம். மாறாக ஒருவரிடம் நீதி என்கிற குணம் அதிகமாக இருந்தால் அது அவரை கட்டுப்படுத்தும். இந்த குணம் முழுமையாக விழிப்படைந்து அப்பியாசத்துக்கு கொண்டு வரப்பட்டால் அவர் இப்படியாக கூறுவார்: "இல்லை, திருடுவது தவறு. இந்த காரியத்தில் கொள்கைகள் மதிக்கப்படவேண்டும்." இப்படியாக அவரது விருப்பமானது கொள்கைகளுக்கு எதிராக சந்தோஷப்படுத்தப்படுவதில்லை.

ஒருவரது நன்னடத்தையை கட்டுப்படுத்தும் உறுப்புகள் மூலமே ஒருவரது சித்தம் உருவாக்கப்படுகிறது. சுயநலம் என்கிற இயற்கை குணம் ஆளுகை செய்தால், அவர் சுயநலமுள்ளவனாக இருப்பார். சிலரிடம் மனசாட்சி என்கிற உறுப்பு செயலற்று இருக்கும். இவர்கள் தங்கள் செயல்பாடுகள் மற்றவர்களை எந்த அளவுக்கு பாதிக்கும் என்பதை சிந்தியாமல் தங்களது உத்தேசத்தின்படி மிருகங்களைப் போல செயல்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் அர்ப்பணத்தில் தங்களது இருதயத்தை கர்த்தரிடம் கொடுப்பார்களானால், அவர்களது வாழ்க்கை முறையில் கவனம் செலுத்துவது மிகவும் அவசியமாக இருக்கும். அவர்கள் போதனைக்கு தேவனுடைய வசனத்தை ஆராய்வார்களானால், அவர்களது நடக்கைகளில் தேவன் சந்தோஷப்படவில்லை என்பதை வேத வசனங்கள் அறிவிக்கும். இந்த தகவலின் பலனால் தங்களது சிந்தனைகளையும், வார்த்தைகளையும் செயல்களையும் சோதித்து பார்க்க கற்றுக்கொள்ள ஆரம்பிப்பார்கள்.

### மனசாட்சி குணலட்சணத்திற்கு பலத்தை கொடுக்கிறது

ஒருவர் அதிக அளவில் பயபக்தியும், அதிக அளவில் தெய்வீக தன்மையும், அதிக அளவில் மனசாட்சியும் உடையவர், மிகவும் குறைவான பயபக்தியும், குறைவான தெய்வீக தன்மையும், குறைவான மனசாட்சி உடையவரைக் காட்டிலும் பெரிய அளவில் அனுகூலம் உடையவராக இருக்கிறார். ஏனெனில் வெவ்வேறு காரியங்கள் வரும்போது இந்த மூன்று மனோசக்தியும் சுபாவத்தின்படி ஏற்றுக்கொண்டு "இது சரி" (அல்லது தவறு சங்கதியைப் பொறுத்து) என்று கூறும். காரியம் சரியாக இருக்கும்போது, தீர்மானம் "இது சரியான காரியம்" என்று கூறும். இப்படிப்பட்ட குணமுடையவர்கள் தாங்கள் சரி என்று நினைக்கிற எதற்காகவும் தியாகிகளாகவும் ஆகக் கூடியவர்களாக இருப்பார்கள். ஏனெனில் நீதியான குணலட்சணத்திற்கு உந்து விசையை கொடுக்கக் கூடிய மூன்று மனதின் குணத்தில் அவர்கள் மிகவும் பலமுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

குறைவான மனசாட்சியை பெற்றிருப்பவர்கள் இந்த குணலட்சண பலத்தில் மிகவும் குறைவுள்ளவர்களாக இருப்பார்கள். வலிமையை எந்த திசையில் அப்பியாசப்படுத்தினாலும் அது பலமான குணலட்சணத்தை உருவாக்குகிறது; கெட்ட சித்தம் கெட்ட குணலட்சணம், நல்ல சித்தம், நல்ல குணலட்சணம். பிறப்பினால் நாம் எப்படி இருக்கிறோமோ, அதுவும் நமது குணலட்சணத்திற்கு ஓரளவுக்கு பங்கு வசிக்கிறது. நமது அர்ப்பணத்திற்கு பிறகு

தேவன் நமக்கு போதிக்கிறார். தவறுக்கு பதிலாக சரியானதை செய்யும் மனதை பெறும்படி நமது சிந்தை புதுப்பிக்கப்பட்டு மறுரூபமாகிறோம். இது சித்தம் உருவாகிறதற்காக மனதை சரிபண்ணுதல் ஆகும்.

வலிமையான சித்தம் மற்றும் வலிமையான குணலட்சணம் உருவாக நாம் கஷ்டப்பட்டு முயற்சி செய்ய வேண்டும். நமது குணலட்சணத்தை பலவீனப்படுத்தும் அனைத்தையும் நீக்கிவிட வேண்டும். தங்கள் குணலட்சணத்தை வலிமைப்படுத்துகிறவர்கள், தாங்கள் நினைப்பது தேவனுடைய சித்தம் என்று நியாயப்படுத்துகிறார்கள். அவர்கள் நினைப்பது செய்ய வேண்டிய சரியான காரியம் என்று நியாயப்படுத்துகிறார்கள். பிறகு அதை செய்ய தீர்மானிக்கிறார்கள். அவர்களது நோக்கத்தை நிறைவேற்ற எந்த இடையூறும் இல்லாதபடி பார்த்துக் கொள்கிறார்கள். வலிமையான, நல்ல சித்தத்தை உடையவர்கள் வாழ்க்கையில் வரும் ஒவ்வொரு கஷ்டம் மற்றும் சோதனையில் உதவியை பெறுவார்கள்.

## R 5159 The Deluge Effect
## ஜலப்பிரளயத்தின் விளைவு

ஆதியாகமம் 6:9–22; 7:11–24

*"பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்." ரோமர் 6:23*

விஞ்ஞான பூர்வமான வேதமாணவர்கள், வேதாகமம் கூறுகிற ஜலப்பிரளயத்தை மறுக்கிற விஞ்ஞானிகள் என்று அழைக்கப்படுகிறவர்களைப் பார்த்து ஏளனமாக சிரிப்பது முற்றிலும் நியாயமானது என்ற முடிவுக்கு சீக்கிரத்தில் வருகிறார்கள். வேதாகமமானது பூமியின் அமைப்பியல், வானசாஸ்திரம் மற்றும் சரித்திரம் ஆகியவற்றால் ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது. பாபிலோனின் பூர்வீக ஏடுகள் ஜலப்பிரளயம், நோவா மற்றும் அவரது பேழையைப்பற்றிய சரித்திரத்தை கூறுகின்றன.

வேதாகமத்தின் நற்பெயரைக் கெடுக்கும் வண்ணமாக, இந்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆதியாகம பதிவுகள் பாபிலோனிய பதிவுகளிலிருந்து எடுக்கப்பட்டவை என்று அறிவிக்கிறார்கள். எப்படிப்பட்ட அறிவீனம்! நமது ஆதியாகம பதிவுக்கு ஒப்பான பழங்கால சரித்திரம் ஏதுமில்லை என்பதை அறியாதவர்கள் யார் இருக்கிறார்கள். மனித குடும்பங்களின் தொடர்ச்சியான சரித்திரத்தை வல்லுனர்களால் கூட கொடுக்க இயலவில்லை. ஆதாமிலிருந்து ஜலப்பிரளயம் வரை 1656 வருடங்கள் என்பதை அல்லது ஒரு திட்டமான பதிவை, அல்லது எவ்வளவு நாட்கள் மழை பெய்தது, வெள்ளமானது எவ்வளவு உயரம் சென்றது, அல்லது வெள்ளம் வடிவதற்கு எவ்வளவு நாட்கள் தேவைப்பட்டது என்பதை வேதாகமம் கொடுப்பது போல யாராலும் கொடுக்க இயலவில்லை.

"*குருட்டுத்தனமான அவிசுவாசம் தவறு செய்வதும் தவறாக கணிப்பதும் நிச்சயம்" தேவனுடைய புத்தகம் வீணாகிறது.*

பூமி தட்டையாக இருந்தால் ஜலப்பிரளம் என்கிற தத்துவம், அதன் தண்ணீர் மலைகளுக்கும் குன்றுகளுக்கும் மேலாக சென்றதை கற்பனை செய்து பார்க்கலாம். ஆனால் பூமி உருண்டையாக இருக்கும்போது எப்படி இது உண்மையாக இருக்க முடியும் என்று ஒருவர் கூறுகிறார்.

பூமியின் அமைப்பியல் வேதமாணவர்களுக்கு உதவியாக வருகிறது. அது அநேக மகா ஜலப்பிரளயங்கள் வந்திருப்பதை மிக தெளிவாக குறிப்பிடுகிறது. மகா மணற் கற்களின் படுக்கைகள், களிமண், மகாகற்பாறை முதலானவைகள் மகா ஜலப்பிரளத்தினால் அவைகள் இருக்கிற இடத்திலே படிய வைக்கப்பட்டிருக்கின்றன என்று விஞ்ஞானம் கூறுகிறது. இந்த படிமானங்களில் சில மேற்பரப்பிலிருந்து நூறு அடிக்கு கீழே இருக்கின்றன.

இந்த பிரளயங்கள் எல்லாம் எங்கிருந்து வந்தன என்று நாம் கேட்டால், வான சாஸ்திரம் நமக்கு வியாழன் மற்றும் சனி கிரகங்களின் "வளையங்களை" சுட்டிக்காட்டுகின்றன. கிரகங்கள் வெண்மையான வெப்பத்தில் இருந்தபோது, தண்ணீரும் தாதுப்பொருட்களும் வாயு நிலையில் இருந்த வளையங்கள் மிகத் தொலைவில் வீசப்பட்டன என்று விஞ்ஞானிகள் அறிவிக்கிறார்கள். அதைத் தொடர்ந்து அவைகள் குளிரடைந்து பலவிதமான அடுக்குகளாக அல்லது வளையங்களாக உருவாயின. அவைகள் கிரகங்களிலிருந்து மிக தூரத்தில் இருந்ததால் அவைகளது சூழற்சி வேறு விதமாக இருந்தது. அவைகள் கிரகங்களை தொங்க வைக்கிற அதே விதியினால் தொங்க வைக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் அதிக கனமுள்ள கிரகங்கள் அவைகளை தங்களிடத்தில் அருகருகே இழுத்துக்கொள்கின்றன.

கிரகத்திற்கு அருகேயுள்ள வளையம் அதை நெருங்கும்போது, வான மண்டலமாகிய காற்றுமண்டலம் அதை தள்ளி வைக்கிறது. கிரகங்கள் தங்கள் அச்சுகளில் சுற்றும்போது துருவங்களில் குறைந்த எதிர்ப்பையே கொடுக்கின்றன. இந்த வளையங்கள் பெரிய உறைபோல பரவி, மையத்தில் அல்லது பூமத்திய ரேகையில் படிப்படியாக மெலிதாகி, துருவங்களில் பருமனாகிறது. இப்படி காற்று

மண்டலத்திற்கு மேலாக அதன் நிறை அதிகமாகும்போது, இரண்டு துருவங்களிலும் உடைத்துக் கொண்டு பிரளயம் உண்டாகிறது.

## பூமியில் மழையில்லை

ஜல பிரளயத்தக்கு முன்பு பூமியிலே மழை பெய்யவில்லை என்பது ஆச்சரியப்படக்கூடிய விஷயமாக இருக்கிறது. (ஆதியாகமம் 2:5) நாம் முன்னே பார்த்ததற்கு இது முழுமையாக இசைந்திருக்கிறது. பூமியும் ஒரு காலத்தில் இதைப் போன்ற "வளையங்களை" உடையதாக இருந்திருக்கிறது. அவைகள் நீண்ட இடைவெளியில் ஒன்றன்பின் ஒன்றாக, 6வது தொகுதியில் ஆறு சிருஷ்டிப்பின் நாட்கள் என்கிற முதலாவது பாடத்தில் நாங்கள் விளக்கியிருப்பது போல, கீழே தள்ளப்பட்டன. இந்த ஜலப்பிரளயங்கள் மூலமாக நமது தாதுப்பொருட்கள் படிய வைக்கப்பட்டன. நிலக்கரி படுக்கைகள் புதையுண்டன.

எல்லாவற்றையும் முன்னறிந்த தேவன், நோவா காலத்திய ஜலப்பிரளயத்தின் அவசியத்தை முன்னறிந்தார். ஆகையால் அவர் மனிதனை சிருஷ்டித்தபோது, பூமியின் கடைசி வளையம் உடையாதிருந்தது. தமது திட்டத்தின் அம்சங்களை அவர் கால நிர்ணயம் பண்ணினார். ஆனால் அது நீண்ட காலம் வளையமாக நீடித்திருக்கவில்லை. மேலேயிருந்த தண்ணீர் பூமியை நெருங்கி ஒரு தண்ணீர் மண்டலம் (Water Canopy) உருவானது. வானமண்டலமானது அதை சும்மா தள்ளி வைத்தது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் அங்கே மழையோ அல்லது புயலோ இல்லை. பூமி முழுவதும் சமமான வெப்பம் இருந்தது. சூரிய கதிர்கள் தண்ணீர் மண்டலம் மேல் உஷ்ண வீட்டின் வெள்ளை கண்ணாடி மேல் படுவதுபோல பட்டன. பூமியின் வெப்பநிலை பூமித்திய ரேகையிலிருந்து துருவம் வரை ஒரே மாதிரியாக இருந்தது. வெப்ப மண்டல விலங்கினங்களும் தாவரங்களும் துருவ பிரதேசத்தில் நூற்றுக்கணக்கான அடிகள் கீழே பனியில் புதையுண்டு இருப்பது இதை நிரூபிக்கிறது.

## துருவங்களில் பனி எப்படி வந்தது?

பனியுகத்தில் பெரும் பனிக்கட்டிகள் துருவங்களில் இருந்து பூமத்தியரேகை பகுதிக்கு வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டதை பூமியின் புவியியல் சான்று பகர்கின்றது. இந்த பெரும் பனிக்கட்டிகள் இடம் பெயர்ந்ததால் பெரும் பள்ளத்தாக்கு உண்டானதை புவியியல் வல்லுனர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவர்களது கண்டுபிடிப்புகளின் மூலம் பூமியானது ஒரு காலத்தில் பனியால் சூழ்ந்திருந்தது என்ற கோட்பாட்டை அமைத்தார்கள். 4400 வருடத்திற்கு முன்பு பிரளய காலத்தின் பனிக்கட்டி அடித்துச் செல்லப்பட்டதற்கு பதிலாக அநேக வெறுமையை (ஒன்றுமில்லாததை) சேர்க்கிறார்கள். எந்த அளவுக்கு சேர்க்கிறார்களோ அந்த அளவுக்கு தங்களது சாதனை என்று பெறுமையடித்துக் கொள்கிறார்கள். ஏனெனில் இதன் மூலம் அவர்கள் வேதாகமத்தை விட்டு விலகுவதாகவும் வேதாகமத்தை இழிவுப்படுத்துவதாகவும் நினைக்கிறார்கள்.

ஆனால் விஞ்ஞான பூர்வமான வேதமாணவர்கள் தேவனுடைய வசனத்தில் தங்கள் விசுவாசத்தை மென்மேலும் ஸ்தாபிக்கிறார்கள். வறண்ட பிரதேசத்தை பாதிக்காமல் சூடான வெப்பநிலை துருவ பிரதேசத்திற்கு வெகுவேகமாக பரவி வருகிறது. "கிரீன் லேண்டின் (**Greenland**)பனிமலை" என்பது கடந்த காலத்திற்குரியதாக சீக்கிரத்தில் மாறும். துருவங்கள் வெப்பமாகிக் கொண்டிருக்கின்றன. பனி மூடிகள் எல்லாம் கரைந்து கொண்டிருக்கின்றன. கடந்த குளிர்காலம் அலஸ்காவின் "வைக்கோல் தொப்பி காலமாக" "(Straw hat season) அழைக்கப்பட்டது. ஏனெனில் இதற்கு முந்தைய காலத்தைக்காட்டிலும் வெப்பநிலை அதிகமாக இருந்தது.

## உமது வசனமே சத்தியம்

இந்த உண்மைகளை வேதாகமத்தின் பதிவுகளோடு பொருத்திப்பார்த்தால், அதிக ஆவலை மாத்திரமல்ல, தேவனிடத்திலும் அவரது அருட் கொடைகளிலும், வேதாகமத்திலும் விசுவாசத்தை ஊக்குவிக்கிறதாகவும் இருக்கும். மேலும் வேதாகமத்தில் நம்பிக்கை இல்லாமலும் அதை அவமதிக்க நாடுகின்ற வல்லுனர்களின் கொடிய யூகங்கள் மேல் அவமதிப்பையும் ஏற்படுத்தும்.

திடீரென தண்ணீர் மண்டலம் உடைந்தது மட்டுமே ஜலப்பிரளயம் இரண்டு துருவங்களுக்கும் வருவதற்கும் மத்தியரேகையை நோக்கி பேரலைகள் செல்வதற்கும் காரணமல்ல. புவியியல் வல்லுனர்கள் சொல்வது போல அது அதிகமான குளிர்ச்சியை திடீரென ஏற்படுத்தியிருக்கும். தண்ணீர் அதி சீக்கிரத்தில் உறைந்து மிருகங்கள் பனிக்கிடையில் புதையுண்டு போயின. சமீப காலத்தில் பனிக்கட்டியை தோண்டி பார்த்தபோது மிருகங்கள் பல்லுக்கிடையில் புல்லுடன் அப்படியே இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

வேதாகமத்தோடு நம்மை இணைப்பதற்கான தொடர் ஆதாரங்களை பெற நாம் இரண்டையும் இரண்டையும் ஒன்றாக சேர்க்க மட்டுமே செய்ய வேண்டும். உதாரணத்திற்கு, இப்பொழுதைக் காட்டிலும் அப்பொழுது துருவங்கள் ஏன் அதிக குளிராக இருந்தது என்று கேட்கப்படுகிறது. அதற்கான பதில்: சூரியனின் கதிர்கள் தற்காலத்தைப்போல நேரடியாக பூமத்திய ரேகை பகுதியில் விழுந்தன. ஆனால் வெப்ப மண்டல பிரதேசம், வெப்பத்தை சுமந்து உலக முழுவதும் பரப்புக்கிற வியாபாரக் காற்று வீசும் வரை, தற்காலத்தைக் காட்டிலும் அதிக வெப்பமாக இருந்தது. சமுத்திரத்தின் நீரோட்டம் ஆரம்பிக்கும் வரை பூமத்திய ரேகை பிரதேசத்தில் வெப்பம் அதிகமாகவும் துருவங்களில் குளிர் அதிகமாகவும் இருந்திருக்க

வேண்டும். வளைகுடாவின் வெள்ளம் தண்ணீரை பூமத்தியரேகை பிரதேசத்திலிருந்து எடுத்துச் சென்று அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் கடற்கரைகளில் விநியோகிப்பது போலவும், பசிபிக் கடலில் உள்ள நீரோட்டம் ஜப்பான் மற்றும் மற்ற நீரோட்டத்தை பூமத்திய ரேகை பிரதேசத்திலிருந்து துருவங்களுக்கு எடுத்துச் செல்வது போலவும் இது இருக்கிறது.

அனைத்து விஞ்ஞானிகளும் ஒப்புக் கொள்வது போல கடந்த 4400 வருடங்களாக இந்த செயல்முறை படிப்படிப்பாக துருவ பிரதேசங்களை உருகச் செய்கிறது. இது சமீப காலத்தில் அநேக பெரும் பனிக்கட்டிகளை உடைத்து துருவ பிரதேசத்தின் பனியாற்றில் மிதக்கச் செய்து கப்பல் மாலுமிகளுக்கு கஷ்டத்தை கொடுக்கிறது.

இதனிமித்தம் இன்னும் கேள்விகள் இருக்கின்றன. பூமத்திய ரேகை பிரதேசத்தை நோக்கிய இந்த அதிவேக நீரோட்டம் நோவாவின் பேழையை ஏன் எடுத்துச் செல்லவில்லை? அது கட்டப்பட்ட இடத்திலிருந்து அதிக தூரம் செல்லாமல் ஏன் அரராத் மலையின் மேல் அது தங்கியது? பேராசிரியர் ஜார்ஜ் ஃபிரட்ரிக் ரைட் (Professor George Frederick Wright) சில கருத்துக்களை கூறினார். அது வேதாகமத்தின் வருணனைக்கு சரியாக பொருந்துகிறது. வேகமாக ஓடும் நீரோட்டம் பெரும் பனிக்கட்டிகளை சுமந்து கொண்டு பாறைகளில் உருண்டு கொண்டு ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் ஒருவேளை ஆசியாவின் பற்பல பகுதிகளை பார்வையிட்டன, ஆனால் அரராத் மலையிடம் செல்லாமல் தவிர்த்தது என்று பேராசிரியரின் புவியியல் ஆதாரங்கள் மூலம் நாம் புரிந்துகொள்கிறோம். அங்கே வண்டல் மண்ணின் படிவங்களின் ஆழங்கள் அசாதாரணமாக இருக்கின்றன. அங்கே சுற்றிலும் கிளர்ச்சி இருந்தபோது, நீர்ச்சுழிகளும் கடற்சுழிகளும் அங்கே அருகே இருந்தது என்று புவியியல் வல்லுனர்கள் கூறுகிறார்கள்.

மகா சிருஷ்டிகர் நோவாவையும் அவனது குடும்பத்தையும் பாதுகாத்து அவர்கள் மூலமாக புது மனுக்குல சந்ததியை உருவாக்க திட்டமிட்டு, ஜலப்பிரளயத்தின் நீரோட்டங்களை ஒழுங்குப்படுத்தக்கூடியவராக இருந்தார் என்று தேவனுடைய பிள்ளைகள் விசுவாசிப்பது ஒரு பெரிய காரியமா?

*"நான் அவரை என்ன வந்தாலும் நம்புவேன்."*

தண்ணீர் வடிவதற்கு தேவையான காலம் (ஆதியாகமம் 8:1–14) விஞ்ஞான ஆராய்ச்சிக்கு இசைவானதாகவும் சரியானதாகவும் இருப்பதை கவனிக்கும் போது நமக்கு இது மேலும் சந்தோஷத்தைக் கொடுக்கிறது.

### ஜலப்பிரளயத்திற்கான காரணம்

ஜலப் பிரளயத்திற்கான பௌதீக சம்பந்தமான காரணத்தை நாம் முன்னரே பார்த்திருக்கிறோம். அடுத்து தேவன் நோவா மற்றும் அவனது குடும்பத்தைத் தவிர மற்ற மனுமக்களை அழிக்க ஏன் திட்டம் பண்ணினார் என்பதை நாம் ஆராய்வோம். "ஆரம்பம் முதல் முடிவுவரை" அறிந்த தேவன் ஏன் கடைசியான தண்ணீர் மண்டலத்தை மனித சிருஷ்டிப்புக்கு முன்னரே பூமிக்கு கொண்டு வராமல் அங்கேயே இருக்கும்படி அனுமதித்தார்?

சாத்தானின் எதிர்ப்பையும், அவன் "இந்த உலகத்தின் பிரபு" வாக ஆக முயற்சிப்பான் என்பதையும் தேவன் முன்னறிந்தார் என்பதே இதற்கான பதில். மேலும் அவர் தனது மானிட மகனாகிய ஆதாம் அவன் மேல் வருகிற சோதனையில் அவன் விழுந்து போவான் என்பதையும் முன்னறிந்தார். ஆதாம் பாவம் செய்ய தூண்டப்படுதலையும், விழுந்து போகுதலையும் முன்னறிந்த தேவன் அதை அனுமதித்தார். ஏனெனில் முடிவாக நன்மையானவைகள் நிறைவேற்றி முடிக்கப்படும் என்பதையும் மனிதர்களுக்கும் தூதர்களுக்கும் மதிப்புமிக்க போதனையான பாடங்கள் கொடுக்கப்படும் என்பதையும் தேவன் முன்னறிந்தார். இந்த பாடங்கள் பூமியிலும் வானத்திலும் இருக்கிற ஒவ்வொரு சிருஷ்டியின் அன்பையும் விசுவாசத்தையும் சோதிக்கிறது. சரியாக கற்றுக்கொள்ளும் போது, நித்திய காலமாக அது அவர்களுக்கு பிரயோசனமாக இருக்கும்.

தேவன் தம்முடைய அறிவுள்ள சிருஷ்டிகளிடத்தில் அனைத்து தொடர்புகளும் தெய்வீக அன்பினால் வழி காட்டப்பட்ட முழுமையான நீதியின் வழியிலேயே இருக்கும். ஆனால் அன்பானது தெய்வீக நீதியை வழிகாட்டும் போது நீதியானது ஆட்சி செய்ய வேண்டும். நாம் வசிக்கிறதாவது: "நீதியும் நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம்." (சங்கீதம் 89:14) ஜலப்பிரளயத்தின் காலத்தில் மனிதனுடைய நடக்கைகளும் இருதயத்தின் நினைவுகளும் "நித்தமும் பொல்லாததாக இருந்து" மிகவும் துன்மார்க்கமானார்கள். (ஆதியாகமம் 6:5) என்று வேதத்தில பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

துன்மார்க்கமானது 1600 வருடங்களாக பெருகினதற்கு காரணம் மனிதருடைய ஒழுக்கக் கேடு மாத்திரமல்ல, சில தூதர்களின் அந்தரங்க ஆதரவினாலும் ஆகும். இவர்கள் பரிசுத்தமாகவும் பூரணராகவும் சிருஷ்டிக்கப்பட்டிருந்தாலும், மனுக்குலத்தின் மூலமாக பாவத்தினால் தேவனிடத்தில் கீழ்ப்படியாதவர்களாகும் வரை வசீகரிக்கப்பட்டவர்களானார்கள். இவர்களது அதிக அறிவானது மனுக்குலத்தை அக்கிரமத்தின் ஆழத்திற்கு கொண்டு சென்றது.

பரிசுத்த தூதர்கள் மனித ஜீவிகளாக சரீரத்தையும் உடையையும் எடுத்துக் கொண்டு உருவானதை வேதாகமம் அநேக இடங்களில் குறிப்பிடுகிறது. சுபாவப்படி காணக்கூடாத மூன்று ஆவியின் ஜீவிகள் ஆபிரகாமிடத்தில் மனிதர்களாக தோன்றி, உணவருந்தி, பேசினார்கள். பிற்பாடுதான் அவர்கள் தூதர்கள் என்பதை அறிந்தார். அதுவரை அவர்களை ஆபிரகாம் அறியாதிருந்தார். ஜலப்பிரளயத்திற்கு முன்பு எல்லா

தூதர்களுக்கும் இந்த சிலாக்கியம் இருந்ததாக காணப்படுகிறது. அதன் பிறகு அவர்களில் சிலர் மனுஷ குமாரத்திகளின் அழகினால் கவரப்பட்டு, அவர்களை தங்களுக்கு மனைவிகளாக்கிக் கொண்டு பூமியிலே மனிதர்களாக வாழ்ந்தார்கள்.

அப்போஸ்தலர் யூதா இப்படியாக இவர்கள் தெய்வீக சட்டத்தை மீறி, ஆவியின் ஜீவிகளுக்குரிய, "தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்டார்கள்" என்று அறிவிக்கிறார். மனிதர்களாக தோன்ற கிடைத்த அனுமதியை மனுக்குலத்திற்கு உதவிடவும் போதிக்கவும் பயன்படுத்தாமல் இந்த சக்தியை மனுக்குலத்தை மிக வேகமாக சீரழிக்க பயன்படுத்தினார்கள். இந்த தேவ புத்திரர்களுக்கும் மனுஷகுமாரத்திகளுக்கும் பிறந்த பிள்ளைகள் மனிதர்களாக, ஒரு புது இனத்தவர்களாக, ஆதாமின் குடும்பத்திலிருந்து வேறுபட்டவர்களாக இருந்தார்கள். அவர்கள் மனத்தளவிலும் உடலளவிலும் இராட்சதர்களாக, பூர்வத்தில் பேர் பெற்ற "மனுஷராகிய பலவான்களானார்கள்" என்று நாம் வாசிக்கிறோம்.

அவர்கள் மனிதர்களாக வளர்ந்து பேர்பெற்றவர்களானது, தேவதூதர்களுக்கும் மனிதர்களுக்குமான இந்த தவறான உறவு நூற்றுக்கணக்கான வருடங்கள் தொடர்ந்தது, ஏனெனில் பண்டைய காலங்களில் முழு மனித பருவத்தை நூறு வருடங்களுக்குள்ளாக அடையவில்லை. சிற்றின்பத்தினாலும் தெய்வீக கட்டளையை மீறுதலினாலும் ஜெநிப்பிக்கப்பட்ட தூதர்களின் இராட்சத பிள்ளைகள், சுபாவத்தின்படி நற்குணத்திற்கோ அல்லது பரிசுத்தத்திற்கோ பேர் பெற்றவர்களாகாமல் எதிரிடையாக ஆனார்கள். ஆகையால் நாம் மேலும், தேவ தூதர்களின் அந்த குமாரர்கள் மனுக்குலத்தின் மேல் கொடுமை செய்து, முழு பூமியும் அக்கிரமத்தினால் நிறைந்தது என்று வாசிப்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை.

அப்படிப்பட்ட நிலைமையில் தேவனுடைய கோபம் வெளிப்படுவதற்கான நேரம் வந்தது. அந்த தூதர்களையும் அவர்களது பேர்பெற்ற ராட்சதர்களையும், ஜலப்பிரளயத்திற்கு முன்பிருந்த சீரழிந்த ஆதாமின் இனத்தையும் நரகத்தில் போட்டு வதைக்காமல் ஜலப்பிரளயத்தினால் அடியோடு அழித்தார். இப்படியாக தேவன் பாவத்திற்கான அவரது எதிர்ப்பையும் முடிவாக எல்லாம் முற்றிலுமாக அழிக்கப்படும் என்கிற தமது தீர்மானத்தையும் ஒரு உதாரணமாக வைத்தார். இதிலும் சரி, வேறு எதிலும் சரி, பாவிகளையோ அல்லது யாரையோ நித்தியமாக வதைக்கிற காரியத்தை தேவன் நினைக்கவேயில்லை.

மாறாக, ஜலப்பிரளய காலத்திற்கு முன்பிருந்த ஆதாமின் இனத்தின் பாவிகளும் மற்ற எந்த காலத்திலும் உள்ள மற்ற பாவிகளை போல கிறிஸ்துவின் பலியினால் மீட்கப்படுவார்கள். மேசியா தமது நீதியான ஆயிர வருட ஆட்சியின் காலத்தில் தொடர்பு கொள்ளப் போகிற, திரளான ஜனங்களில் இவர்களும் இருப்பார்கள். இவர்கள் அனைவரும் மற்ற மனுக்குலத்தாரைப் போல சரியான சத்திய அறிவுக்குள் கொண்டு வரப்படுவார்கள். இப்படி செய்வதின் நோக்கம் என்னவென்றால், தெரிந்து செய்த கீழ்ப்படியாமைக்கு தண்டனையின் பாடத்தைப் பெற்ற பிறகு, அவர்கள் விரும்பினால் பாவம் மற்றும் மரணத்திலிருந்து முழுவதுமாக மீட்கப்படுவார்கள்; இழந்து போன எல்லாவற்றிற்கும் திரும்ப கொண்டு வரப்படுவார்கள் என்பதாகும். அதாவது இயேசுவின் விலைக்கிரயத்தினால் உலகளாவிய மனித பூரணத்திற்கும் நித்திய ஜீவனுக்கும் பூமிக்குரிய பரதீசில் கொண்டு வரப்படுவார்கள்.

ஆனால் மானிட தாய்மார்களுக்கு பிறந்த தூதர்களின் பிள்ளைகளுக்கு எந்த நம்பிக்கையும் இல்லை. அவர்களது ஜெநிப்பித்தலும் பிறப்பும், தேவனால் அங்கீகரிக்கப்படவில்லை. அவர்கள் மரணத்தால் சங்கரிக்கப்பட்டார்கள். அவர்கள் எழும்பி வரவோ அல்லது உயிர்த்தெழவோமாட்டார்கள்.

விழுந்துபோன தூதர்களைப்பற்றி வேதம் சொல்கிறதாவது: அவர்கள் இந்த 4400 வருடங்களாக தேவனால் வெளியேற்றப்பட்டு, "அந்தகாரச் சங்கலியினால், கட்டி" "மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று" வைக்கப்பட்டிருக்கிறார்கள். (யூதா 6: 2பேதுரு 2:4)

இந்த பாடத்தைப் பற்றிய முழு புத்தகத்தை, பூருக்ளீன் ஆலயம், புரூளின், நியூயார்க் என்ற முகவரிக்கு ஒரு தபால் கார்டு மூலம் எழுதி கேட்கிறவர்களுக்கு நாங்கள் இலவசமாக அனுப்பி வைப்போம்.

------

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ, **C.T. ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்,

வெளியிடுபவர்:

சகோ, **R. செல்வராஜ்.** சென்னை வேதமாணவர் சபை.
எண்: 22. முதல் தெரு. ராஜீவ் நகர். காலடிப்பேட்டை. திருவொற்றியூர்.
சென்னை- 600 019, கைபேசி: 97909 00030, மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com
Website : www.thestudiesinthescriptures.com

**FOR PRIVATE CIRCULATION ONLY**